விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

மலர்: இருபது — Valampurii

திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 18 ஞாயிற்றுக்கிழமை (31.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 43

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

# துன்புறுத்தல்கள் தொடருமாயின் இரகசியங்களை வெளியிடுவேன்



## சரத் பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

தனக்கு எதிரான துன்புறுத்தல்களை அரசாங்கம் நிறுத்தாவிடின், அரசாங்கத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தப் போவதாக முன்னாள் இராணுவத் தளபதியும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளருமான சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்றுமாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு தடையாக இருக்க வேண்டாம்!

### அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் நாளாந்த செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் அவர்களது இயல்பு வாழ்க்கைக்குத் தடையான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என்றும் கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமைகள் தோன்றி எமது மக்களைப் பல் வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாக்கியதை நாம் மனதில் கொண்டு இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்வதே நாம் எமது சமுதாயத்திற்குச் செய்யும் உன்னத கடமையாகும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக

(19 ஆம் பக்கம் பார்க்க)

## ...விவகார அமைச்சர் ...பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

...விவகார அமைச்சர் றோகித போ...கம நேற்று யாழ்ப்பாணத்துக்கு ...சய்தார்.

...க்காலை யாழ்ப்பாணம் விஜயம் ...வர் நல்லூர் கந்தசாமி ஆலயத்துக் ...று பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார். ...ன் யாழ். பொது நூலகத்துக்குச் ...வரை யாழ் அரச அதிபர் க.கணேஷ் ...ார்.

...பொது நூலகத்தைச் சுற்றிப் பார்த்த ...மூக சேவைகள் மற்றும் சமூக நலத் ...மைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். ...திபர்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை தமிழ் மக்கள் தேர்தலில் நிரூபித்துள்ளனர்

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



(கொழும்பு)


தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனேயே இருக்கின்றார்கள் என்பது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்பேசும் சிறுபான்மை மக்கள் உணர்வுபூர்வமாக ஒற்றுமையுடன் இத் தேர்தலுக்கு முகம் கொடுத்துத் தமது அரசியல் பலத்தை நிரூபித்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வன்னியில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)





யாழ்.பண்ணை வீதியில் மண்டைதீவுச் சந்திக்கு அண்மையாக ஹன்டர் வாகனம் ஒன்று கடலுக்குள் ...ந்து விபத்துக்குள்ளானது. அதனையே படங்களில் காண்கின்றீர்கள். (படங்கள்:- றம்சன்)

## லங்கா செய்தித்தாள் காரியாலயம் சீல் வைப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான லங்கா செய்தித் தாளின் நுகேகொட பிரதேசத்தில் உள்ள காரியாலயம் நேற்று குற்றவியல் தடுப்புப் பிரிவினரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் இந்தச் சீல் வைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஐ.எம்.கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் இந்தக் காரியாலயம் சீல் வைக்கப்பட்டுள்ளதாகத் தமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ...காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களை ...ந்தர வலயங்களுக்குத் திரும்பப் பணிப்பு

### ...றின் பதவியை இழக்கும் அபாயம்

(திருகோணமலை)

...ன்னி மாவட்டத்திலுள்ள பாடசாலை... கடமையாற்றி தற்போது வேறு பாட...களில் இணைப்புப் பெற்றுள்ள ஆசிரி...ின் தற்காலிக இணைப்புக்கள் உடனடி... அமுலுக்கு வரும் வகையில் இரத்துச்...ப்படுவதாக வட மாகாண கல்வி... ...ச்சின் பதில் செயலாளர் தி.பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

கிளிநொச்சி, மடு, துணுக்காய், முல்லைத்தீவு மற்றும் வவுனியா வடக்கு கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாகக் கடமையாற்றி வேறு வலயங்களில் இணைப்புப் பெற்றுள்ள

(19 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டமைப்பில் மாற்றம்

### இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் தயா ரட்ணாயக்கா

(கொழும்பு)



இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் தயா ரட்ணாயக்கா நியமிக்கப்பட்டுள்ளதாகப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

இராணுவக் கட்டமைப்பில் உடனடியாக பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இராணுவத்தின் பிரதம அதிகாரியாகக் கடமையாற்றிய மேஜர் ஜெனரல் மெண்டக்கா சமரசிங்கா இணைந்த நடவடிக்கை தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

அவரின் இடத்திற்கு மேஜர் ஜெனரல் தயா ரட்ணாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். ரட்ணாயக்கா முன்னர்

(19 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஞ்ச உற்சவத்தில் முருகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராய் திருவீதியுலா வருவதனைப் படங்களில் காணலாம். (படங்கள்-றம்சன்)

# விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சங்கரத்தையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 7.30மணியளவில் சங்கரத்தை பத்திரகாளி கோவிலுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த க.ஞானசேகரன் (வயது 35) என்பவரே படுகாயமடைந் தவராவார். (ச-27)

# போதைப் பொருள் வர்த்தகர் நட்சத்திர ஹோட்டலில் கைது

(கொழும்பு)

கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் வைத்து சர்வதேச போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவரை சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

ஐந்து கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்களை குறித்த நபர் இலங் கைக்குள் கடத்திச் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 26ஆம் திகதி டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்த குறித்த நபர் ஓர் ஈரானிய பிரஜை என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகத்திற்கு இடமான வகையில் செயற்பட்ட குறித்த நபரை பரிசோதிக்க முற்பட்ட போது பயணப் பொதிகளை விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக வும் பின்னர் நட் சத்திர ஹோட்டல் ஒன்றில் வைத்து கைது செய்ததாகவும் சுங்கப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட உள்ள தாகத் தெரிவித்து குறித்த நபர் மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். (ச-5)

# 'பதவியை இராஜினாமா செய்யப் போவதில்லை'

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசில் அமைச்சுப் பதவியை வகித்து வரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது பதவியை இராஜினாமாச் செய்யப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனது இராஜினாமாவைக் கைவிட்டது குறித்து பி.பி.ஸி. தமிழோசைக்கு கருத்து வெளியிட்ட டக்ளஸ் தேவானந்தா,

நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழ் மக்கள் தவறான வழியில் நடத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதன் காரணமாக அவர்கள் தவறான முடிபினை எடுத்துவிட்டார்கள்.

ஜனாதிபதி மஹிந்தவின் வெற்றியில் பங்கெடுத்து அதன் மூலம் வளமான எதிர் காலத்தை விரைவாக பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன்தான் நாம் மஹிந்தவை ஆதரிக்க தீர்மானித்தோம்.

13வது அரசியல் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தோம்.

எமது 10அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றிருந்தார்.நடைமுறைப்படுத்துவதாகவும் கூறினார்.

அத்துடன் இந்தக் கோரிக்கையை தமிழ் மக்கள் எவ்வாறு அணுகினார்களோ தெரியாது. ஆனால் தவறான வழி நடத்தலின் அடிப்படையில் வாக்குகள் அளித்திருக்கலாம் என்றும் கூறினார். (ச)

# பண்ணை வீதி மோசமாகச் சேதம்; கடலுக்குள் பாய்ந்தது ஹன்டர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை வீதியில் மண்டைதீவுக்கு அண்மித்த பகுதியில் ஹன்டர் வாகனம் ஒன்று கடலுக்குள் பாய்ந்ததில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து வேலணைக்குச் சென்ற ஹன்டர் வாகனமே பிற்பகல் 3மணியளவில் கடலுக்குள் பாய்ந்துள்ளது.

நயினா தீவிலிருந்து பக்தர்களை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றுக்கு இடம் கொடுத்த போது ஹன்டர் கடலுக்குள் பாய்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் ஹன்டரில் பயணம் செய்த ஒருவர் சிறு காயங்களுக்குள்ளானார்.

இவ் வாகனம் மாலை 6 மணியளவில் கடற்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டது. இதன் போது சுமார் ஒருமணி நேரம் அவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

இதேவேளை பண்ணை வீதி சேதமடைந்துள்ளமையே இவ்விபத்து நிகழ்வுக்கு காரணம் என சாரதிகள் தெரிவித்தனர்.

கடந்த 2008ல் ஏற்பட்ட நிஷா புயல் காரணமாக பண்ணை வீதி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதனைத் திருத்துவது தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கடந்த ஒருவருடமாக தெரிவிக்கப்பட்டு வந்தது.

எனினும் அவ்வீதி இன்றுவரை திருத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

பண்ணை வீதி முற்றாக சேதமடைந்துள்ளமையால் அதனூடக பயணம் செய்யும் போது விபத்துகள் இடம்பெறும் சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது. (ச-7)


## அன்பான வேண்டுகோள்



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான

**கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

அவர்களின் சேவை தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் தேவை என்பதினால்தாங்கள் தயவுசெய்து பதவியை இராஜினாமா செய்ய வேண்டாம் என அன்பான வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்ட
தனியார் பேருந்து கழகம்
– உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள்.

(C-4365)

## ஐங்கரன் திருமண சேவை

மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 29,31,33,37 வயது, Canada Citizen 30,34,36 வயது, Swiss Citizen 30,33 வயது, Holand Citizen 37 வயது , Germany Citizen 33,38 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு :- லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673
E-mail:- wwwayngaranwedding@yahoo.com

(543)

அம்மா பகவான் சரணம்

## சிறீ கல்கி மெடிக்கல் கிளினிக்

Reg-No-98.340C

உயர் இரத்த அழுத்தம், சலரோகம், ஆஸ்துமா, வாதங்கள் ஒற்றை தலைவலி போன்ற எவ்வகையான ரோகங்களிற்கும் அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு உண்டு.

தொடர்பு-Dr.சங்கர்

இல.80, ஆடியபாதம் வீதி, (ஸ்டேசன் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(யாழ் மருத்துவ பீடத்திற்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில், (டிரான்ஸ்போமர் அடி)

(513)

## Rooms Available

[அறைகள் வாடகைக்கு]

AC, Non AC அறைகள் Booking செய்து கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு:-
முகாமையாளர்
R.M.S லிமிட்டட்
121 A, பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.
T.P.:0779496985
(டேவிட் பீரிஸ் முன்பாக)

(C-4343)

## நாற்று விற்பனைக்குண்டு

றோமா தக்காளி
K.A2 மிளகாய்
நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.உடன் பெற்றுக்கொள்ளலாம்.

வைரமுத்து சிவலிங்கராஜா,
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.
(C.D இல்லம் அருகாமை)

(C-4356)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1991
06
03

மறைவு
2009
02
11

## பாஸ்கரலிங்கம் நிதீபன் (சுபாஸ்)

திதி—31.01.2010

எங்கிருந்தோ வந்த செல்லால்
எம்மைப் பிரிந்தாய் தம்பி
இங்கிருப்பாய் எம் நெஞ்சில்
என்றும் நீங்காது நிதீபனாய்

இல.20, பிரதான வீதி,
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-4363)

## வீடு விற்பனைக்கு

பலாலி றோட் கோண்டாவில் சந்தியில் நவீன மேல் வீடு சகல வசதிகளுடனும் வாகன தரிப்பிட வசதியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
077 8330655
077 4736503
077 2726644

(545)

## மணமகள் தேவை

கனடா பிரசா உரிமையுடைய யாழ்.இந்து வேளாளர், நட்சத்திரம் பூசம் கிரக பாவம் 29, செவ்வாய் 12, வயது 29உடையவருக்கு பொருத்தமான மணமகள் தேவை.செவ்வாய் 2,4,12ல் உள்ளது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
077 4895716
077 9002293

(544)

## சேவை மூகவர் விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதி, கோயில் வீதி அம்மன் வீதி,கட்டைப்பிராய் 3ஆம் கட்டை கல்வியங்காடு, பலாலி வீதி கோண்டாவில், கந்தர்மடத்துக்கு அண்மையில் முருகேசர் லேன், கந்தபுராண வீதி ஆகிய இடங்களில் காணி வீடு விற்பனைக்கு உண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.வேறு தரகர் தேவை இல்லை.

தொடர்பு:- சுந்தரம்
T.P:- 021 222 9177

(547)

# பல் சுவை உலகம்

## பறவை ரோபோ




ரோபோ நாய்க்குட்டி, ரோபோ மனிதன் வரிசையில் ரோபோ பறவையும் இடம் பிடித்துள்ளது. அதென்ன ரோபோ பறவை? ஜப்பானின் ஷிபா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஹிரோஷி ரையு என்பவர் ரோபோ ஹம்மிங் பறவையை உருவாக்கி உள்ளார்.

ஒரு விநாடிக்கு இது 35 முறை இறக்கையை அடித்து ஹம்மிங் செய்கிறது. இது 10 செ.மீ நீளம் மற்றும் 2.6 கிராம் எடையுள்ளது. பிளாஸ்ரிக் இறக்கைகள் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இது மைக்ரோ அக்டிவேட்டர் கருவி மூலம் எல்லாத் திசைகளிலும் பறக்கும் படியும் செய்துள்ளார் பேராசிரியர்!.

## சிறந்த சிகிச்சை

ஐந்து நிமிடங்களில் வானொலி அலைகள் (ரேடியோ வேவ்ஸ்) மூலம் கண்சிகிச்சை எடுத்துக் கொள்ளும் புதிய முறையை இங்கிலாந்து நாட்டு மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

எப்படி? கண்பாப்பாவில் மரத்து போகச் செய்யும் மருந்தை முதலில் இடுகின்றனர். பின்னர் மயிரிழை போன்ற ஊசியில் வானொலி அலைகளை கண்கார்னியா பகுதியில் செலுத் துகின்றனர். இதனால் வெப்பம் வெளிப்பட்டு கோலோஜன் சுருங்கி கண்லென்சை அழுத்தி பார்வையைத் தெளிவாக்கிறது. இப்படி வித்தியாசமான சிகிச்சையால் கண் குறைபாட்டை சுலபமாக சரி செய்து விட முடிகிறது. குறிப்பாக தூரப்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு இது சிறந்த சிகிச்சையாக அந்நாட்டில் பரவியுள்ளது.



ஜோதிடமணி பிரம்மஸ்ரீ.
சி. ஜகதீஷ்வரசர்மா அவர்கள்
வழங்கும் நாளாந்த சைவ நற்சிந்தனைகள்
உங்கள் மொபைலில்!

செவிமடுக்க 556 ற்கு டயல் செய்யுங்கள்

Dialog

இதோ 171 ஸ்ரான்லி வீதியில்...

S.P.N. Motors

உங்களது நன்மதிப்புப் பெற்ற

TVS
Scooty pep
Scooty Streak




விவசாய
உபகரணங்கள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

எஸ்.பி.என்
மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

உங்களைக் கவனிக்க யாரோ ஒருவர் தயார்நிலையில்



உங்களுக்கு ஆதரவு வழங்க
ஒருவர் தயார் நிலையில்

சம்பத் வங்கி. உங்களது வாழ்க்கைப் பயணத்தில் புதுப்புது தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் ஒப்பற்ற நிதிச் சேவைகள் மூலம் தயக்கமற்ற ஆதரவை உங்கள் காலடிக்கே கொண்டுவரும் கம்பீரமான நிறுவனம்.

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank

எதிர்காலத்தின் முன்னோடிகள்

The Banker
SRI LANKA

www.sampath.lk

Sampath Bank PLC-PQ 144

## ஏ.எச்.01என் வைரஸினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை

நொவல் இன்புளுவன்சா எனப்படும் ஏ.எச்.01 என் 1 வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 636 பேருக்கு இந்த வைரஸ் தொற்றியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 24ஆம் திகதி வரை இந்த வைரஸ் தொற்றியதா என்பதை கண்டறியும் பொருட்டு 2 ஆயிரத்து 380 இரத்த மாதிரிகள் மருத்துவ ஆய்வுக்குட்படுத்தப்பட்டதாக அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (2)

## புதிய தடை

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்கு செல்வதற்கு கடந்த வாரம் அனுமதியளிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் அப்பகுதிக்கு சைக்கிள்களிலும் கால்நடையாகவும் சென்ற மக்கள் படையினரால் தெல்லிப்பளை இராணுவச் சாவடியுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வாகனங்களில் சென்றவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2)

## உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மீள் மதிப்பீட்டுப்பணி அடுத்த மாதம் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகளை அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கு முன்னரை விட இம்முறை பெருமளவு விண்ணப்பங்கள் மீள் மதிப்பீடு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் 2 இலட்சத்து 12 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர் எனவும் இவர்கள் தோற்றி விடையளித்த 8 இலட்சத்து 48 ஆயிரம் விடைத்தாள்களில் சுமார் 60 ஆயிரம் விடைத்தாள்களை மீள் மதிப்பீடு செய்யுமாறு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும் மீள் மதிப்பீட்டுப் பணிகளை விரைவாக நிறைவு செய்ய எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மதிப்பிடும் இரண்டாம் கட்டப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## உதவித் தொகை அதிகரிப்பு

வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களுக்கான உதவித் தொகை ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கு எண்ணியுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

100 ரூபாவாக வழங்கப்படும் இந்த உதவித் தொகையை 1000 ரூபாவாக அதிகரிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாக சமூக நலன்புரி விவகார பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை இந்த உதவித் தொகையைப் பெறுவதாக அமைச்சர் குறிப்பிட்டார். அவர்களின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கான யோசனையை இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்க எண்ணியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-3)

## கௌரவிப்பு நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வாராந்த நிகழ்வு வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் நிகழ்த்துவார். மதிப்பீட்டுரையை வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் நிகழ்த்தவுள்ளார். (6-35)

## ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்னும் விடயம் பற்றி தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (6-35)

## இராசி பலன்

31-01-2010
(தை 18, ஞாயிற்றுக்கிழமை)
பிரதமை முற்பகல் 10.32 மணி வரை
ஆயிலியம் முற்பகல் 11.55 மணி வரை
இராகு காலம் - 5.06-6.36 மணி வரை
சுபநேரம் - 9.36-11.06 மணி வரை

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் ஆர்வம், புதிய திருப்பம், குடும்பக் கவலை, காரிய இடையூறு. |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, சுபசெலவு, அதிக பிரயாசை, பிரயாண நன்மை. |
| மிதுனம் | இஷ்டசித்தி, மனோதைரியம், உறவினர் வருகை, இனிய சம்பவம். |
| கடகம் | அமைதிக் குறைவு, பொருள் விரயம், போசன சுகம், ரோக நிலை. |
| சிங்கம் | பெரியோர் சந்திப்பு, தெய்வசிந்தை, தேகநலன், சயனசுகம். |
| கன்னி | உணர்ச்சி வசப்படுதல், தந்தை வழி உறவு, ஆரோக்கியக்குறைவு, சுபசெலவு. |
| துலாம் | தெய்வசிந்தை, கலந்துரையாடல், முயற்சி கைகூடும், கீர்த்தி. |
| விருச்சிகம் | இனிய செய்தி, அதிக பிரயாசை, உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| தனுசு | சரீரப் பிரயாசை, வீண்பயம், பயணம், குடும்பக் கவலை. |
| மகரம் | தேவையற்ற பகை, உடல்நலக் குறைவு, போசன சுகம், அபகீர்த்தி. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், பண வருவாய், நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை. |
| மீனம் | ஆரோக்கிய நிலை, காரிய அனுகூலம், தொழில்சிந்தை, பிரயாணம். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

## பயந்த சுபாவம்

"ஏன் சேர் தியேட்டரின் வாசல் வரைக்கும் வந்துவிட்டுத் திரும்பிவிட்டீர்கள்?"

"இருதய பலவீனம் உள்ளவர்கள் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டாம் என்று போட்டிருக்கிறது."

"பயந்த சுபாவமா உங்களுக்கு"

"ஆமாம்! பயத்தில் இருதயம் நின்றுவிட்டால்..."

"உலகத்திலேயே அதிக நேரம் இதய இயக்கம் நின்றுபோய் உயிர் பிழைத்திருப்பது யார் தெரியுமா?"

"யார்?"

"ஜூன் சௌபோன் என்ற 20 வயதுப் பெண்."

"அப்படியா?"

"ஆமாம்! அந்தப் பெண்ணுக்கு திடீரென்று இதயவலி வந்தது. 1977ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி திடீரென்று இதயம் வேலை செய்யாமல் நின்றுவிட்டது"

"எவ்வளவு நேரம் அப்படி நின்றுவிட்டது?"

"8 மணி 32 நிமிடம்"

"ஆ... அப்படியா?"

"கனடாவில் மனிடோவா நகரில் உள்ள வின்னிபெக் மெடிக்கல் சென்டரில் வேலை செய்யும் டாக்டர்கள் 26 பேர் சேர்ந்து பெரிடோனியல் டயலிசிஸ் சிகிச்சை கொடுத்தார்களாம். அந்தப் பெண்ணுக்கு மறுபடியும் உயிர் வந்து விட்டதாம்."

"அப்பாடா... எனக்கும் இப்பொழுதுதான் உயிர்வந்தது.

"காதால் கேட்பதற்கே இப்படிப் பயப்படுகிறீர்களே..." கண்ணால் பார்த்தால் என்ன ஆகும்?

"என்ன ஆகும். என் இதயம் சில விநாடி நின்றுபோய்விடும். நேற்றுக் கூட அப்படித்தானே ஆகிவிட்டது."

"என்ன ஆச்சு?"

"ஓர் இதய அறுவைச் சிகிச்சையை நேரில் பார்க்கச் சந்தர்ப்பம் வந்துவிட்டது."

"நீங்கள் ஏன் சேர் அப்படியான இடத்துக்கெல்லாம் போறீங்க?"

"நான் போகாம எப்படி? அந்த அறுவைச் சிகிச்சையைச் செய்ய வேண்டியதே நான்தானே."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 150 |
| தக்காளி | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 90 |
| கரட் | 120 | 140 | 100 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 90 | 100 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 180 | 200 | 150 |
| லீக்ஸ் | 120 | 140 | 90 |
| பீற்றூட் | 90 | 100 | 140 |
| கறிமிளகாய் | -- | -- | 280 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 140 | 90 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# மதுரையில் ரயிலை கவிழ்க்க சதி! பயணிகள் உயிர்தப்பினர்



(நாகர்கோவில்)

தண்டவாளத்தின் குறுக்கே 11 அடி நீள இரும்பு கம்பியை வைத்து கொல்லம் – மதுரை பயணிகள் ரயிலை கவிழ்க்க முயற்சி நடந்தது. டிரைவரின் சாமர்த்தியத்தால் பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள்.

கேரள மாநிலம் கொல்லத்தில் இருந்து நாகர்கோவில் வழியாக மதுரை செல்லும் கொல்லம் – மதுரை பயணிகள் ரயில் நாகர்கோவில் ரயில் நிலையத்துக்கு இரவு 10.20 மணிக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு 10.40 மணிக்கு புறப்பட்டுச் செல்வது வழக்கம்.


கடந்த வியாழன் இரவு இந்த ரயில் நாகர்கோவில் ரவுன் ரயில் நிலையத்துக்கு நள்ளிரவு 11.05 மணிக்கு வந்து கொண்டு இருந்தது. அப்போது முன்பக்கத்தில் இருந்து டம டம என்று பயங்கர சத்தம் கேட்டது. ஏறத்தாழ ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை இந்த சத்தம் கேட்டதால் உஷாரான டிரைவர் ரயிலை நிறுத்தி விட்டு கீழே இறங்கிச் சென்று பார்த்தார்.

அப்போது என்ஜினின் முன்புறத்தில் தண்டவாளத்தில் உள்ள தடைகளை அகற்றும் தடுப்பு (கவுகாச்சர்) பகுதியில் 11 அடி நீள் பெரிய இரும்புகம்பி சிக்கி இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். அந்த கம்பியை என்ஜின் தள்ளிக்கொண்டே சென்றதால் தான் சத்தம் கேட்டு இருக் கிறது.

இரவில் வரும் ரயில்களை கவிழ்ப்பதற்காக யாரோ மர்ம மனிதர்கள் அந்த இரும்புக் கம்பியை தண்டவாளத்தின் குறுக்கே போட்டு விட்டு சென்று இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் டிரைவர் சாமர்த்தி யமாக செயற்பட்டு ரயிலை நிறுத்தியதால் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. அந்த ரயிலில் பயணம் செய்த 800 க்கும் மேற்பட்ட பயணி களும் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.

தகவல் அறிந்ததும் நாகர்கோவில் ரயில்வே அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். ரயில் தண்டவாளத்தில் இரும்பு கம்பியை போட்டு ரயிலை கவிழ்க்க சதி நடந்து இருக்கலாமா? என்ற கோணத்தில் ரயில்வே பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

நாகர்கோவில் ரவுன் நிலையத்தில் தண்டவாளத்தை மாற்றும் பணி நடந்து வருகிறது. அங்கு பழைய தண்டவாளத் துண்டுகளை பக்கவாட்டில் குவித்துவைத் துள்ளனர். அந்த குவியலில் இருந்து தண்டவாளத் துண்டுகளில் ஒன்றைத்தான் தண்டவாளத்தின் மத்தியில் வைத்திருந்தது விசாரணையில் தெரிய வந்தது. (2-6)



நாமக்கல் கூலிப்பட்டியில் சிற்பி சின்னக் கண்ணு என்பவரால் கருங்கல்லால் செதுக்கப் பட்ட தவில் மற்றும் புல்லாங் குழல்.

# உலகில் செல்வாக்கு மிக்க சக்திவாய்ந்த கோடீஸ்வரர்



(புதுடில்லி)

உலகின் செல்வாக்கு மிக்க, சக்தி வாய்ந்த கோடீஸ்வரர்கள் பட்டியலில் இந்தியாவின் முகேஷ் அம்பானி இடம்பெற்றிருக்கிறார்.

இந்தப் பட்டியலில் லஷ்மி மிட்டலும் இடம் பெற்றுள்ளார். அமெரிக்காவின் புகழ்பெற்ற "போர்ப்ஸ்" பத்திரிகை இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலகக் கோடீஸ்வரர்களில் வெகு சிலர் ; மட்டுமே செல்வதோடு, செல்வாக்கு மற்றும் அரசியல் தளத்தில் தாக்கம் செலுத்துவதற்கான சக்தியையும் பெற்றுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள இந்தப் பத்திரிகை, அத்தகைய கோடீஸ்வரர்களைப் பட்டியலிட்டுள்ளது.

நியூயோர்க் நகரின் மேயரின் மைக்கேல் பூளும் பர்க், இத்தாலிய பிரதமர் சில்வியோ பெர்லுகோனி, சிலி அதிபர், கோடீஸ்வரர் செபாஸ்டின் பியாரா ஆகியோர் இடம்பெற்றுள்ள இந்தப் பட்டியலில் இந்தியாவிலிருந்து முகேஷ் அம்பானி மற்றும் லஷ்மி மிட்டல் இடம்பெற்றுள்ளனர். இந்தியாவின் மிகப் பெரிய தனியார் நிறுவனத்தை முகேஷ் அம்பானி நடத்தி வருவதாக பாராட்டுத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## பாரதச் செய்திகள்

# நானும், அழகிரியும் இரட்டைக்குழல் துப்பாக்கி

## மு.க.ஸ்டாலின் பெருமிதம்



(மதுரை)

நானும், அண்ணன் மு.க.அழகிரியும் இரட்டைக்குழல் துப்பாக்கி போன்று ஒன்றாகச் செயல்பட்டு இயக்கத்துக்கும், முதல்வர் கருணாநிதியின் கரத்துக்கும் வலுச்சேர்ப்போம் என்று துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதுரையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மு.க.அழகிரி பற்றிய "அப்பாவுக்கு தப்பாது பிறந்த பிள்ளை" எனும் நூல் வெளியீட்டு விழாவில் அவர் பேசியதாவது,

அண்ணன் மு.க.அழகிரியின் பிறந்தநாளன்று இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உங்களோடு சேர்ந்து நானும் அவரை வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன்.

கடந்தாண்டு மதுரையில் அவரது பிறந்தநாள் பொதுக்கூட்டம் மாநாடு போல் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு வாழ்த்தும் போது நானும், அண்ணன் அழகிரியும் திமுகவின் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இணைந்து பணியாற்றி இயக்கத்துக்கும், தலைவர் கருணாநிதிக்கும் வலுச்சேர்ப்போம் என்று உறுதி கூறினேன். அதே கருத்தை இப்போதும் நினைவு படுத்துகிறேன் என்றார். (2-6)



தெலுங்கானா மாநிலம் அமையும் வரை ஐதராபாததில் ஐ.பி.எல். போட்டிகளை நடத்த அனுமதிக்க மாட்டோம் என்று கூறியுள்ள உஸ்மேனியா பல்கலை மாணவர்கள் ஐ.பி.எல் என்று பெயரிடப்பட்ட உருவப்பொம்மையை தீயிட்டு கொளுத்தினர்.

# அவுஸ்திரேலியா போகவேண்டாம்; இந்திய மாணவர்களுக்கு எச்சரிக்கை

அவுஸ்திரேலியாவுக்கு படிக்க இந்திய மாணவர்கள் செல்ல வேண்டாம் என்று மத்திய அரசு மீண்டும் எச்சரிக்கை செய்து இருக்கிறது. அவுஸ்திரேலியாவில் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் படிக்கிறார்கள். இதில் அதிகமானவர்கள் சீனாவைச் சேர்ந்த மாணவர்கள். இரண்டாவதாக இந்திய மாணவர்கள் தான் அதிகம். வெளிநாட்டு மாணவர்கள் அங்கு கல்வி கற்பதால் அந்த நாட்டின் பொருளாதாரம் மேம்பாடு அடைகிறது.

ஆனால் அங்கு சமீப காலமாக இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகமாக நடந்து வருகிறது. நிதின் கார்க் என்ற மாணவர், ரன்ஜேஹத் சிங் என்ற தொழிலாளி உட்பட 3 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். கடந்த வியாழக்கிழமை இந்தியர்கள் பலர் தாக்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவுக்கு இந்திய மாணவர்கள் செல்ல வேண்டாம் என்று மத்திய அரசு ஏற்கனவே எச்சரிக்கை விடுத்தது. நேற்று முன்தினம் மீண்டும் மத்திய வெளிநாட்டு இலாகாவின் ராஜாங்க அமைச்சர் பிரினீத் கவுர் இதே கருத்தை வலியுறுத்தினார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதால் அங்கு செல்ல வேண்டாம் என்று இந்தியர்களுக்கும் மாணவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன். படிப்பதற்காக அங்கு செல்வதை மாணவர்கள் தவிர்க்க வேண்டும்.

லண்டனில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா அவுஸ்திரேலிய நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித்தை சந்தித்து இவ்வாறான தொடர் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து இருக்கிறார். அப்போது அவுஸ்திரேலிய அமைச்சர் இந்த பிரச்சினை பற்றி ஆய்வு செய்ய உயர் மட்ட குழு அமைக்கப்பட்டு இருக்கிறது என்று கூறி உள்ளார். இந்தியர் மீதான தாக்குதல்கள் உடனே தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று அவுஸ்திரேலிய அமைச்சரிடம் எஸ்.எம். கிருஷ்ணா உறுதியாக தெரிவித்து இருக்கிறார் என்றார். (2-6)

# இந்தியக் கடற் பகுதியில் 10 இலங்கை மீனவர் கைது

இந்தியக் கடலோரக் காவல் படையினர் வியாழனன்று சென்னை அருகே கடல் பகுதியில் ரோந்துப் பணியல் ஈடுபட்டிருந்தனர். அப்போது, இந்தியக் கடல் பகுதியில் 2 படகுகளில் இலங்கை மீனவர்கள் சிலர் அத்துமிறி மீன் பிடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தனர். உடனே காவல் படையினர் விரைந்து சென்று 2 படகுகளையும் சுற்றி வளைத்தனர். அதில் இருந்த இலங்கை மீனவர்கள் 10 பேரையும் கைதுசெய்தனர். பின்னர் அவர்கள் அனைவரையும் சென்னை காசி மேடு மீன்பிடித் துறைமுக காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். அவர்களிடமிருந்து 2 படகு களும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மீனவர்கள் 10 பேரிடமும் காசிமேடு மீன்பிடித் துற்றமுக பொலிஸார் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் அனைவரும் இலங்கையைச் சேர்ந்த, ஆன்டன்ரங்கா (வயது 20) , நுவான் (வயது 20), ஜெயலாத் (வயது 45), தயந்த சதுரங்க(வயது 20), நுனா (வயது30), நஜீத் (வயது 30), தினேஷ் (வயது 20), கயாத்தரங்க (வயது 24), சதுரான்தகா (வயது 24), துன்துரங்கா (வயது 24) என்பது தெரிய வந்தது.

இதையடுத்து, மீனவர்கள் 10 பேர் மீதும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் எழும்பூர் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். (2-6)

# எனக்கு தமிழ் பேசதெரியும் ; இலங்கையில் தமிழ் மக்களுக்கு பிரச்சினை என்பது இல்லை

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

எனக்கும் தமிழ் பேச தெரியும் எனவே இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சினை என்பது இல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக பிரித்தானியாவை தளமாக கொண்ட தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் முன்னாள் இராணுவ ஜெனரல் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். அதனை தொடர்ந்து ஜெனரல் விடுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இலங்கையில் தேர்தல் வன்முறைகள் நடைபெறுவது ஒரு வரலாற்று தொடர்ச்சி எனினும் ஜெனரல் விடுதியில் இருந்தவாறு நேரடி ஒளிபரப்பில் பேசியது எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருந்தது.

தேர்தலில் மஹிந்த 58 விகித வாக்குகளையும் பொன்சேகா 40 விகித வாக்குகளையும் பெற்றதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார். அதற்கு முன்னர் தேர்தல் ஆணையாளர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்ததாக இலங்கை கார்டியன் ஊடகம் தெரிவித்திருந்தது.

இலங்கையின் சனத்தொகையின் 20 விகிதமான மக்கள் தொகையை கொண்ட தமிழ் மக்களுடன் ஒரு புதிய அணுகுமுறையுடன் மஹிந்த பேச்சுகளை ஆரம்பிப்பாரா என்பது தொடர்பில் பலர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நடைபெற்ற தினத்தில் யாழ். குடாநாட்டில் தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றதாக அறிக்கைகள் தெரிவித்துள்ளன. மக்களிடம் அச்சங்களை தோற்றுவிப்பதற்காகவே இந்த குண்டு வெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். அதன் மூலம் வாக்காளர்களை வாக்கு பெட்டிகளில் இருந்து அவர்கள் தள்ளிவ்வைத்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களில் பலரும் வாக்களிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். வாக்குகள் எண்ணப்பட்ட போதும் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் சுயாதீன அமைப்பு தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

தேர்தல் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டதாக பொன்சேகாவும் அவரது கூட்டணி கட்சிகளும் குற்றம் சுமத்துகின்றனர்.

இரண்டு பிரதான அரச தொலைக்காட்சிகள் தமது நிகழ்ச்சிகளில் 96.75 விகிதம் மஹிந்தவின் பிரசாரத்தையே மேற்கொண்டிருந்ததாக அனைத்துலக ஊடகங்களை கண்காணிக்கும் அமைப்பான ஆர்.எஸ். எஃப் தெரிவித்துள்ளது.

இருவரும் விடுதலைப்புலிகளை முறியடித்தவர்கள் என்பதால் போட்டி மிகவும் உக்கிரமாக இருந்தது. எனினும் தமிழ் மக்களின் முடிபு மிகவும் கடினமானதாக இருந்தது. இருவர் மீதும் போர்க் குற்ற விசாரணைகள் உண்டு. ஆனால் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ்க் கட்சிகளில் பெரும்பாலானவர்கள் பொன்சேகாவையே ஆதரித்திருந்தனர். விடுதலைப்புலிகளின் ஆதரவுக் கட்சியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பொன்சேகாவையே ஆதரித்திருந்தது.

எனினும் சிங்கள பிரதேசங்களை விட தமிழ் பிரதேசங்களில் மக்கள் வாக்களித்த விகிதம் மிகவும் குறைவாகவே இருந்தது. இது பொன்சேகாவின் வாக்கு விகிதத்தை பாதித்திருந்தது.

பொன்சேகா இராணுவப்புரட்சியை மேற்கொள்ள முனைந்தவர் என்ற குற்றச்சாட்டுக்களை அரசு முன்வைத்துள்ளது. அதனை தொடர்ந்து அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லும் திட்டத்தை கொண்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

தமிழ் மக்களை பொறுத்தவரையில் அவர்களின் பிரச்சினைகளுக்குரிய அரசியல் தீர்வுக்கான சாத்தியங்கள் குறைவடைந்துள்ளது. ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படுவது தொடர்பில் சந்தேகங்கள் எழுந்துள்ளதாக அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழுவை சேர்ந்த அலன்கீனன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் விடுதலைப்புலிகள் முறியடிக்கப்பட்ட பின்னர் மகிந்த நாடாளுமன்றத்தில் தமிழில் உரையாற்றியிருந்தார். அப்போது தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை வழங்குவதாக அவர் தெரிவித்திருந்தார்.

பலர் தற்போதும் காத்திருக்கின்றனர். ஆனால் பெரும்பாலானவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். மகிந்த பல பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்க வேண்டும் என தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் கோரிக்கைகள்.



தமது குரல்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு நியாயமான அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என தமிழ் மக்கள் விரும்புகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அவர்களின் கோரிக்கை.

ஆனால் தமிழ் மக்களுக்கு மகிந்த ஏதாவது செய்வார் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றதா?

அதற்கான பதிலை தேர்தலுக்கு முன்னர் (24-01.2010) லக்பிம வார ஏட்டின் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு மகிந்த அளித்த பதில்களில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

லக்பிம நீங்கள் தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்தியை கூற விரும்புகிறீர்களா?

மகிந்த : என்ன?

லக்பிம ? தமிழ் பேசும் மக்களுக்கு?

மகிந்த: எனக்கும் தமிழ் பேசதெரியும் எனவே இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு பிரச்சினை என்பது இல்லை. (2-6)

# நாட்டின் சகல பகுதி மக்களும் ஒரே விதமாக நடத்தப்படவேண்டும்

## -அஸ்கிரிய பீடாதிபதி-

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்கள் ஜனாதிபதிக்கு நன்றி பாராட்டத் தவறிவிட்டதாக அஸ்கிரிய பீடா திபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கிததேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க அஸ்கிரிய மாநாயக்க தேரரை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உணவு, வீதி, வீடுகள் ,குடிநீர் போன்ற பல்வேறு வசதிகளை ஜனாதிபதி வடக்கு கிழக்கு மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்ததாக அவர் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தெற்கு மக்கள் தங்களது நன்றியை பாரிய அளவில் ஜனாதிபதிக்கு வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும் நாட்டின் சகல பகுதிகளைச் சேர்ந்த மக்களும் ஒரே விதமாக நடத்தப்படவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ள அவர் தமிழ் மூஸ்லிம் சமூகங்களுக்கு அரசாங்கம் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அதன் மூலம் அவர்கள் புறக்கணிக்கப்படவில்லை என்பதனை உணர்வார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பு குறைக்கப்படக்கூடாது. அனைத்து மக்களும் அரசியலில் ஈடுபட உரிமையுடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# அரசாங்க ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் 2500 ரூபா சம்பள உயர்வினை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். வரவு செலவுத் திட்ட யோசனையின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பு குறித்த யோசனைத் திட்டம் ஏப்ரல் மாதம் முன்வைக்கப்பட உள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்துறை அமைச்சின் செயலாளர் டி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் மே மாதம் முதல் இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படக் கூடும் என குறிப்பிட்டுள்ளார்.

திறைசேரியிலிருந்து தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னரே சம்பள உயர்வு அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளதோடு நவம்பர் மாதம் முதல் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதா அல்லது ஜனவரி மாதம் முதல் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதா என்பது குறித்து அரசாங்கம் விரைவில் தீர்மானிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் நவம்பர் மாதம் முதல் சம்பள அதிகரிப்பு அமுல்படுத்தப்பட்டால் 15000 வரையில் சம்பள நிலுவைப் பணத்தை வழங்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# ஒரு நிமிடம் பேசினால் ரூ.1.50 இலட்சம் கட்டணம்

(கொழும்பு)

பிரிட்டனின் முன்னாள் பிரதமரான டோனி பிளேயர் ஒரு நிமிடச் சொற்பொழிவுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கட்டணமாகப் பெறுகிறார்.

லான்ஸ்டவுண் பார்ட்னர்ஸ் என்ற லண்டன் ஹெட்ஜ் ஃ பண்ட் நிறுவன ஊழியர்கள் மத்தியில் பேசுவதற்காக இந்தக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாம். இந்தக் கட்டணம் உண்மைதானா என்ற கேள்விக்கு டோனியின் பேச்சாளர் பதில் கூறவில்லை.

ஆனால் உலக அளவில் சிறந்த சொற்பொழிவாளராக டோனி திகழ்கிறார் என பெரும் சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார். அவரது கட்டுரைகளுக்காக அவரது புத்தகத்தை வெளியிடும் நிறுவனம் 46 இலட்சம் பவுண்கள் தந்துள்ளது என்றார்.

அமெரிக்க வங்கி ஜேபிமார்கன் மற்றும் ஜூரிச் பைனான்சியல் சர்வீசஸ் எனும் இரண்டு நிறுவனங்களுக்கு ஆலோசகராக டோனி இருக்கிறார். ஜேபி மார்கன் ஆண்டுக்கு 20 இலட்சம் பவுண்ஸ்கள் வழங்குகிறது. ஜூரிச் பைனான்சியல் சர்வீசஸ் 5 இலட்சம் பவுண்ஸ்கள் வழங்குகிறது. இதைத் தவிர அவருக்கு ஆண்டுக்கு 63 ஆயிரம் பவுண்ஸ்கள் ஓய்வூதியமும் கிடைக்கிறது.

ஸ்பெயின் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் நிகழ்த்திய 90 நிமிட சொற்பொழிவுக்கான ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பவுண்ஸ்கள் அவருக்கு கிடைத்துள்ளது என்று அவர் கூறினார்.

பிரதமர் பொறுப்பிலிருந்து விலகிய பிறகு இதுவரை ஒரு கோடி பவுண்ஸ்கள் டோனி பிளேயர் சம்பாதித்திருக்கிறார் என கணக்கிட்டுள்ளனர். (2-6)

# நிவாரணக் கிராமங்களில் சுகாதாரசேவைகள் நிறுத்தம்

(கொழும்பு)

நாளை முதல் வடக்கிலுள்ள நிவாரணக் கிராமங்களுக்கான சுகாதார சேவை நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் வடமாகாண ஆளுநர் அலுவலகமூடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது சுகாதார அமைச்சின் கீழுள்ள 402 ஊழியர்கள் நிவாரணக் கிராமங்களில் சுகாதார சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக நாளொன்றுக்கு 10 இலட்சம் ரூபா செலவிடப்படுவதாக அமைச்சு கூறுகிறது.

அத்துடன் அமைச்சரவை அங்கீகாரத்துடன் கடந்த 6 மாத காலமாக இதற்கான கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் அது சுட்டிக்காட்டுகிறது.

தற்போது நிவாரணக் கிராமங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை 92,000 மாகக் குறைவடைந்துள்ளது. அதற்கிணங்க சுகாதார சேவை நடவடிக்கைகளை மாகாண ஆளுநர் அலுவலகம் மூலம் மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென அமைச்சு குறிப்பிட்டது.

எனினும் 45 வைத்தியர்களை அங்கு சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் தேவையைப் பொறுத்து வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு உதவி வழங்கப்படுமெனவும் கூறியதோடு தேவைப்படும் மருந்துப் பொருட்களின் விநியோகத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டுகிறது. (2-6)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

*2010 ஜனாதிபதித் தேர்தலும் அது விட்டுச் செல்லும் பாடங்களும்* என்னும் கருப் பொருளில் ஆய்வுக் கூட்டமும் கலந்துரையாடலும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் அரசியலில் ஏற்படுத்தப் போகும் தாக்கங்கள் என்ன? அது சிறுபான்மை மக்களின் அரசியல் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தலாம்? வடக்கு கிழக்கு உட்பட தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களித்த விதம் எத்தகைய செய்தியை பறைசாற்றி நிற்கின்றது? இது தென்னிலங்கையில் எத்தகைய மனத் தாக்கங்களை உருவாக்கும்? இத்தேர்தல் வெற்றியின் பின்னர் பெரும்பான்மை சமூகத்தினரின் மனோநிலை எவ்வாறுள்ளது போன்ற பல விடயங்கள் இக்கூட்டத்தில் விவாதித்திற்கு உட்படுத்தப்படவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல நோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபன நிறை வேற்றதிகாரியும் தென்னிலங்கையின் பிரபல அரசியல் விமர்சகருமாகிய கருணாரத்ன பரணவிதாரண சிறப்புரையாற்றவுள்ளார்.

மற்றும் யாழ் .பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் ஹாட்லிக கல்லூரியின் முன்னாள் அதிபருமான முருகுப்பிள்ளை ஸ்ரீபதி, சட்டத்தரணி செல்வி கோசலை மனோகரன், ஊடகவியலாளர் மனோரஞ்சன், சட்டத் தரணி சஞ்சய் விக்னராஜா ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

குடிமக்கள் குரலுக்கான மேடை என்னும் அமைப்பினர் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருப்பதோடு விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந. தமிழ் அழகன் இந் நிகழ்விற்குத் தலைமை தாங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# வலி . மேற்கில் உலக உணவுத்திட்ட இலகு வேலைக்கான துப்புரவு பணிகள்

(பென்னாலை)

உலக உணவுத்திட்டத்தின் இலகு வேலைக்கான திட்டம் வலி. மேற்குப் பிரதேசத்தில் ஆரம்பமாகி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வீதிகள், பொது இடங்கள், ஆலயங்கள், பாடசாலை வளாகங்கள் என்று பல இடங்களிலும் இடம்பெற்று வந்த மேற்படி வேலைத் திட்டம் தற்போது பயனாளிக் குடும்பங்களின் வீடுகள் வரையும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் ஒவ்வொன்றுக்கும் செல்லும் கிராம அலுவலர் வீட்டு வளாகத்தை துப்புரவு செய்யுமாறும் பிறிதொரு தடவையில் தான் வந்து பார்வையிடுவேன் என்றும் பயனாளிக் குடும்பங்களிடம் வலியுறுத்திச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. (6-49)

# முகாம்மக்களை விடுவிக்காதவரை இந்தியா இலங்கைக்கு உதவிகள் வழங்கக்கூடாது

முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை முழுமையாக விடுவிக்காத வரை இலங்கை அரசுக்கு இந்திய அரசு நிதியுதவி உட்பட எந்த உதவியும் அளிக்க கூடாது என்று தா.பாண்டியன் கூறினார்.

சென்னையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

இலங்கையில் ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். அங்கு நடந்த தேர்தலே ஒரு நாடகம்தான் இதில் அவர் வெற்றி பெற்றதில் ஆச்சரியமோ வியப்போ இல்லை. இனியாவது காலதாமதம் செய்யாமல் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவிக்க வேண்டும்.

அவர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு வழிவகுக்க வேண்டும். அவர்களுக்கு அரசியல் உரிமையும் வாழ்வாதர உரிமையும் வழங்கப்பட வேண்டும்.

முகாம்களில் அடைக்கப் பட்டுள்ள தமிழர்களை முழுமையாக விடுவிக்காதவரை இந்திய அரசு இலங்கைக்கு நிதியுதவியோ அல்லது வேறு விதமான உதவிகளையோ அளிக்கக் கூடாது என்றார். (2-6)

# எடை கூடிய வயோதிபருக்கு நீண்ட ஆயுள் காணப்படும்

எடை கூடிய வயோதிபர்கள் நீண்ட ஆயுளைக் கொண்டவர்களாகக் காணப் படுவதாக அவுஸ்திரேலிய் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. சாதரண எடையை விடவும் சற்று எடை கூடியவர்கள் சிறந்த உடலாரோக்கியத்துடன் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் அதிக எடையுடையவர்கள் அல்லது மிகவும் குறைந்த எடையுடையவர்களது ஆயுள் குறுகியதாக காணப்படுவதாகவும் வயோதிபர்களைக் பொருத்தவரையில் கடுமையான உணவுக் கட்டுப்பாடு நன்மை அளிக்காதென மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

70 முதல் 75 வயது வரையிலான வயதுப் பிரிவை உடையவர்கள் தொடர்பில் கடந்த பத்து வருடங்கள் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் மூலம் எடைகூடியவர்களுக்கு அதிகளவு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் வயோதிப காலத்தில் உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சிறந்த பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுட்டிக் காட்டியுள்ளனர். (2-6)


## உடன் தேவை

01. நிர்வாக அனுபவமுள்ள அரச துறையில் ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி
02. பெண் தாதிய பயிலுனர்கள்
(தகைமை:- G.C.E A/L / G.C.E O/L
03. ஆண் தொழிலாளிகள்

உரிய விபரங்களுடன் தபால்மூலம் விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
சென்றல் நேர்ஸிங் ஹோம்,
இல-350, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C-4361)


# தமிழ் நாட்டிலுள்ள இலங்கை [illegible] தாயகம் திரும்ப முடிவு செய்துள்ளனர்

இலங்கை ஜனாதிபதியாக ராஜபக்ஷ மீண்டும் வெற்றி பெற்றுள்ளதால் அடுத்த ஆட்சியாளர் வரும் வரை காத்திருக்கும் எண்ணத்தை கைவிட்டு தாயகம் திரும்ப அகதிகள் பலர் முடிபு செய்துள்ளனர்.

இலங்கையில் விடுதலைபுலிகளின் அழிவுக்குபின் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி சார்பில் ராஜபக்ஷவும் எதிர்க்கட்சி கூட்டணியான ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவ பொறுப்பேற்ற பொன்சேகாவும் களம் இறங்கினார். தமிழ் தேசிய கூட்டணி கட்சி பொன்சேகாவை ஆதரித்தது. ஆனாலும் தேர்தலில் மஹிந்த வெற்றி பெற்றார்.

இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டணி கட்சி ஆதரித்த பொன்சேகா வெற்றி பெற்றால் தங்களுக்கு ஆதரவு கிடைக்கும் என அகதிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால் தற்போது ஜனாதிபதியின் வெற்றியால் அகதிகள் எண்ணம் மாற்றம் அடைந்துள்ளது. அடுத்த ஜனாதி பதித் தேர்தல் வரை இந்தியாவில் இருக்கும் பட்சத்தில் தங்கள் உறவுகள் உடமைகளை இழக்க நேரிடும். எனவே முடிவு எதுவாகயிருந் தாலும் தாயகம் திரும்புவதே சரியாக இருக் கும் என அகதிகள் முடிவு செய்துள்ளனர்.

இதனால் இலங்கைக்கு திரும்பிச் செல்ல அனுமதி கேட்டு விண்ணப்பிக்க தொடங்கியுள்ளனர்.

இது குறித்து இலங்கை அகதிகள் கூறியதாவது, அரசியல் மாற்றத்துக்கு பின் தாயகம் திரும்ப ஆசைப்பட்டோம். அது நிறைவேறாமல் போய்விட்டது. இனியும் காலம் கடத்தும் எண்ணம் இல்லை. எந்த ஆட்சி நடந்தாலும் தாயகத்தில் காலத்தை கடத்த முடிவு செய்து விட்டோம். அதற்காக விண்ணப்பிக்க வந்துள் ளோம் என்றனர். (2-6)

# பொதுத் தேர்தலில் முஸ்லீங்கள் பங்காளர்களாக இணைய வேண்டும்

## முன்னாள் எம்.பி.சுஹைர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எம்முடன் கைகோருங்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்திருக்கும் அழைப்பை தமிழ் , முஸ்லிம் சமூகத்தினர் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று முன்னாள் எம்.பி.யான எம்.எம். சுஹைர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமோக வெற்றி குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

ஜனாதிபதி தேர்தலில் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றுள்ளார். இந்த வெற்றியைத் தொடர்ந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எம்முடன் கைகோர்க்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

வெகுவிரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. அந்தத் தேர்தலிலும் ஜனாதிபதி தலைமையிலான ஆளும் கட்சியே அமோக வெற்றி பெறும். இந்த வெற்றியில் முஸ்லிம்கள் பங்காளர்களாக இணைந்து கொள்ள வேண்டும்.

மேலும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக் காகவும் ஸ்திரத்தன்மைக்காகவும் முஸ்லிம்கள் அரசுடன் இணைந்து செயற்படுவது அவசியம். முஸ்லிம்கள் எதிர்க்கட்சி சமூகமாக இருக்க முடியாது. ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படும் போதே அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். கடந்த தேர்தலில் ஸ்ரீ ல.மு.கா. முஸ்லிம்களை பிழையாக வழி நடாத்தி விட்டது. இனிமேலும் முஸ்லிம்கள் ஸ்ரீ.ல: மு.கா.வின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி விடாது ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றார். (2-6)


## மாநகரசபை, யாழ்ப்பாணம்

### கட்டிட நிர்மான வேலைகளுக்கான மூலப்பொருட்களுக்கான கூறுவிலைக் கோரல்.

மாநகரசபையின் வேலைத்திட்டங்களுக்கு வேண்டிய கீழ்க்காணும் மூலப் பொருட்களை விரைவாக வழங்கக் கூடியவர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றது.

| இல. | கற்கள் | தேவையான அளவு | மாநகரசபை எல்லைக்குள் கொண்டு வந்து வழங்குவதற்கன 1 கியூப்பின் விலை | கிரேசர் நிலையத்தில் உள்ளவாறு 1கியூப்பின் விலை |
|---|---|---|---|---|
| 01. | 1/2" அளவுள்ள கிரேசர் சல்லி | 50 கியூப் | ............... | ............... |
| 02. | 3/4" அளவுள்ள கிரேசர் சல்லி | 30 கியூப் | ............... | ............... |
| 03. | 1" அளவுள்ள கிரேசர் சல்லி | 50 கியூப் | ............... | ............... |
| 04. | 2" அளவுள்ள கிரேசர் சல்லி | 250 கியூப் | ............... | ............... |
| 05. | 1 1/2" அளவுள்ள கிரேசர் சல்லி | 50 கியூப் | ............... | ............... |
| 06. | 4" அளவுள்ள கிரேசர் சல்லி | 150 கியூப் | ............... | ............... |
| 07. | 6"x9" அளவுள்ள கிரேசர் கற்கள் | ............... | ............... | ............... |
| 08. | கிரேசர் டஸ்ற் | ............... | ............... | ............... |
| 09. | ஊரி மணல் | 30 கியூப் | ............... | ............... |

முடிவுத் திகதி 11.02.2010 மு.ப 12.00 மணிக்கு பிந்தாமல் மேற்காட்டப்பட்ட வடிவில் படிவம் தயாரித்து பூர்த்தி செய்து பதிவுத்தபாலில் அல்லது மாநகர சபையின் கணக்குப் பகுதியில் உள்ள பெட்டியில் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(திருமதி யோ.பற்குணராசா)
மாநகர முதல்வர்
.மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C-4362)

# இலங்கை வங்கி

## வடக்கு கிழக்கு மாகாணங்களில் பயிற்சி/ஒப்பந்தஅடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு ஆற்றலும், சுறுசுறுப்பும் மிக்க இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### முகாமைத்துவ பயிற்சியாளர்

**தேவையான தகைமைகள்**

**கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வங்கியியல், நிதியியல், வர்த்தகம், பொருளாதாரம், முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், கணிதம், புள்ளிவிபரவியல், கணனி விஞ்ஞானம், மனித வள முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம்,விவசாயம் சட்டம் அல்லது தொடர்புடைய ஏதேனும் துறையில் வகுப்புடன் பட்டம் அல்லது பட்டப் பின் படிப்பு தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

அல்லது.

- சட்டத்தரணி

அல்லது

- CIMA/ICA யில் முழுமையாக தகுதி

**ஏனைய தகைமைகள்**

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், சிறந்த தொடர்பாடலுடன் கூடிய தகைமைத்துவப் பண்புகளையும், உள்ளார்ந்த திறமைகளையும் குழுவாக இயங்கத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும்.
- கணனி அறிவு மற்றும் தமிழில் சிறந்தமுறையில் தொடர்பாடக்கூடிய ஆற்றல் என்பன மேலதிக அநுகூலங்களாகும்.

**வயது**

- விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல்

**ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள்**

- பொருத்தமானவராகக் காணப்படும் இடத்து நிறைவேற்று உத்தியோகத்தர் வகுப்பில் நிரந்தரப்பதவியில் உள்ளீர்த்துக் கொள்ளத்தக்க ஏற்பாட்டுடன் இரண்டு வருடப் பயிற்சியுடன் கூடிய பயிற்சி ஒப்பந்தமாகும்.
- முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டாலன்றி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் சேவைகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.
- பயிற்சிக் காலத்தில் மாதாந்தக் கொடுப்பனவாக ரூ.25.000/- வழங்கப்படும் மேலும் பயிற்சிக்காலத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி நிரந்தரப் பதவிக்கு உள்ளீர்க்கப்படும் போது அனைத்துப் பயன்களுடனும் கூடிய கவர்ச்சிகரமான சம்பள வொதி வழங் கப்படும்.

**தெரிவு நடைமுறை**

- எழுத்து மூல தெரிவுப்பரீட்சையும், நேர்முகப் பரீட்சையும்
- தெரிவுப் பரீட்சைக்கு தாங்கள் தோற்ற விரும்புகின்ற மொழி மூலத்தை தயவு செய்து தெளிவாக குறிப்பிடுக. (சிங்களம் /தமிழ்/ஆங்கிலம்)

### பயிற்சி அபிவிருத்தி உதவியாளர்

**தேவையான தகைமைகள்**

**கல்வி /தொழில் சார்ந்த தகைமைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் விவசாயத்தில் டிப்ளோமாவை கொண்டிருந்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**வயது**

- விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல்

**தேவைப்படும் ஏனைய திறமைகள்**

- தமிழ் மொழியில் சரளமாக தொடர்பாடக் கூடிய திறமை
- மோட்டார் சைக்கிள்களை ஓட்டுவதற்கு சட்டபூர்வ வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்.

**தெரிவு நடைமுறை**

- நேர்முகப்பரீட்சையின் மூலம்

**ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள்**

- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சி ஒப்பந்தத்தின் கீழ் பயிற்சி அபிவிருத்தி உதவியாளர்களாக நியமிக்கப்படுவர்.
- பயிற்சிக்காலத்தில் நாள் ஒன்றுக்கு ரூபா 750 /-கொடுப்பனவு வழங்கப்படும்.
- முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டாலன்றி அவர்களின் சேவை வடகிழக்கு மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.
- 2 வருட பயிற்சிக்காலம் முடிவடைந்த பின் வங்கியின் தேவை மற்றும் பயிலுநர்களின் தகுதி என்பவற்றுக்கமைய வெற்றிடங்களை நிரப்பும் போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### பயிற்சிச் சட்ட உத்தியோகத்தர்

**தேவையான தகைமைகள்**

**கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்**

- சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு

**அனுபவம்**

- சிவில் வழக்குகள் தொடர்பான நீதிமன்ற வேலைகள், காணி மூல உறுதிப்பத்திரங்களைப் பரீசித்தல், தொழில் உறவு நடவடிக்கைகள் போன்றவற்றில் மூன்று வருட முன் அனுபவம்.

**ஏனைய தகைமைகள்**

- கணனி அறிவு மற்றும் ஆங்கில புலமை என்பன கட்டாயமாகும்.
- குறிப்பாக தமிழ் மொழியில் தொடர்பாடக் கூடிய சிறந்த திறமை
- தலைமைத்துவப்பண்புகள்
- உள்ளார்ந்த திறமைகள்

**வயது**

- விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல்

**ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள்**

- பயிற்சிக்காலம் ( பயிற்சி ஒப்பந்தத்தின் கீழ்) ஒரு வருடமாகும். வங்கியின் மூலம் நடத்தப்படும் விசேட பயிற்சியில் பொருத்தமானவராக தெரிவு செய்யப்பட்டால் உதவி சட்ட உத்தியோகத்தருக்கான அடிப்படைச் சம்பளத்துடன் நிரந்தரப் பதவிக்கு உள்ளீர்க்கபடுவர்.
- பயிற்சிக்காலத்தின் போது அனைத்துப் படிகளும் அடங்கலாக ரூ.25.000/- கொடுப்பனவு வழங்கப்படும்.
- முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டாலன்றி அவர்களின் சேவை வடகிழக்கு மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்படும்

**தெரிவு நடைமுறை**

- நேர்முகப்பரீட்சையின் மூலம்

### உதவி சிவில் பொறியியலாளர்

**தேவையான தகைமைகள்**

**கல்வி/தொழில் சார்ந்த தகைமைகள்**

- NDT-சிவில் பொறியியல் அல்லதுHNDE அல்லது அதற்கு சமானது

**அனுபவம்**

- சிவில் பொறியியல் தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட தனியார் அல்லது அரச நிறுவனம் ஒன்றில் 5 ஆண்டு கால தகைமைக்குப் பின்னான அனுபவம்.

**வ்யது**

- விண்ணப்ப முடிவு திகதியன்று 40 வயதுமேற்படாதிருத்தல்

**தெரிவு நடைமுறை**

- நேர்முகப்பரீட்சையின் மூலம்

**ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள்**

- இந்த நியமனங்கள் , ஆரம்பத்தில் இரண்டு ஆண்டு ஒப்பந்த காலத்தைக் கொண்டவை. அதன் பின் வங்கியின் தீர்மானத்திற்கு ஏற்ப வருடாந்தம் புதுப்பிக்கப்பட கூடியவை
- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாதாந்த வேதனமாக ரூ 35 000/- (அனைத்தும் அடங்கலாக) வழங்கப்படும்.
- முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டாலன்றி அவர்களின் சேவை வடகிழக்கு மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்படும்.

### விண்ணப்ப நடைமுறை

முழுமையான சுய விபரக்குறிப்புகளுடன் பிறப்புச் சான்றிதழ். கல்வி/ தொழிற் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகள் மற்றும் உறவினரற்ற இரு மத்தி யஸ்தர்களின் தொடர்புத் தகவல்கள் என்பவற்றை பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் முகாமைத்துவ பயிற் சியாளர் / பயிற்சி அபிவிருத்தி உதவியாளர் /பயிற்சி சட்ட உத்தியோகத்தர் /உதவி சிவில் பொறியியலாளர் என்பவற்றுள் விண்ணப்பத்திற்குரிய பதவியின் பெயரைக் குறிப்பிட்டு இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட 10 தினங்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

✦ குறிப்பு:- எவ்விதத்திலேனும் ஆதரவு கோரல் தகைமையின்மைக்கு வழிவகுக்கும். விண்ணப்பங்களை தெரிந்தெடுக்கும் உரிமை வங்கிக்குண்டு.

இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
தொழில்வள மற்றும் துறை அபிவிருத்தி,
இலங்கை வங்கி,
26ஆம் தளம், தலைமை அலுவலகக் கட்டடம்,
இல.04, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு-01.

## நேர்முகப் பரீட்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையில் வெற்றிடமாகவுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை திங்கட்கிழமை முதல் தினமும் காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரையும் பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணிவரையும் மாநகரசபை அலுவலகத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மாநகரசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளே இந்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நேர்முகத் தேர் வுக்கு சமூகமளிக்கும் படி கோரும் கடிதங்கள் யாவும் சபையின் தூதுவர்கள் மூலமாக விண்ணப்பதாரிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார். (2-6)

## கோத்தபாய -சோமவன்ச தொலைபேசி மிரட்டலால் சர்ச்சை

கொழும்பில் இடம்பெற்ற பாதுகாப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவிற்கு விடுத்த தொலைபேசி மிரட்டல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இந்த கேள்விக்கு பதிலளித்த பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல அதிகாரத்தில் இருப்பவர்களை அதிகாரத்தில் இல்லாதவர்கள் தான் அச்சுறுத்த முடியும். இங்கு அப் படியல்ல. அதிகாரம் இல்லாத வரை பாது காப்பு செயலாளர் மிரட்டியதான தகவலை நம்பமுடியாதுள்ளது என தெரிவித்தார்.

அப்படிமிரட்டல் விடுக்கப்பட்டிருந்தால் அவர் பொலிஸில் முறைப்பாட்டினை மேற்கொள்ளலாம் எனவும் அப்படி முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் இது தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

## சினி தகவல்கள்

# பெப்ரவரி 5ஆம் திகதி திரைக்கு வருகிறது அசல்



டைரக்டர்சரன் இயக்கத்தில் அஜித் இரட்டை வேடத்தில் நடித்துள்ள படம் அசல். ஏகன் படம் எதிர்பார்த்த அளவுக்கு ஓடாமல் ஏமாற்றிதால் விரக்தியில் இருந்த அஜித், புதுப்பொலிவுடன் அசல் படத்தில் நடித்துள்ளார். அசல் படத்தை சிவாஜி புரொடக்ஷன்ஸ் சார்பில் நடிகர் பிரபு தயாரிக்கிறார். படத்தில் அஜித்துக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் பாலிவுட் நடிகை சமீராரெட்டி. இன்னொருவர் நடிகை பாவனா.

படப்பிடிப்பு முடிந்து ரிலீசுக்கு தயாராகி யிருக்கும் அசல் படத்தை தணிக்கை போட்டு அதிகாரிகள் பார்த்தனர். அதில் இடம்பெற்ற சில காட்சிகள் குழந்தைகள் பார்க்கக்கூடாத காட்சிகள் என கருதிய தணிக்கை அதிகாரிகள், அந்தக் காட்சிகளை நீக்கும் படி டைரக்டர் சரணிடம் கேட்டிருக்கிறார்கள்.

ஆனால் படத்துக்கு அந்தக் காட்சிகள் முக்கியம் என்பதால் அதனை நீக்க மறுத்துவிட்டார் சரண். இதையடுத்து தணிக்கை சபை அதிகாரிகள் யு/ஏ சான்றிதழ் வழங்கி இருக்கிறார்கள். அசல் படம் வருகிற பெப்ரவரி 5ஆம் திகதி திரைக்கு வருகிறது.


## ஜீனியர் ஜெயம் ரவி ரெடி



"தில்லாலங்கடி" ஷூட்டிங்கில்இருக்கும் ஜெயம் ரவிக்கு 'கண்ணபிரான்' பிரபுதேவாவின் 'இச்' படங்கள் இருக்கின்றன. முதலில் எந்த ஷூட்டிங்கிற்கு செல்வார் என்று தெரியவில்லை.

விரைவிலேயே அப்பாவாக போகிறார் ரவி.

## சிவன் வேடத்தில் தனுஷ்



ஆடுகளம், மாப் பிள்ளை, ஜெனிலியாவுடன் பெயரிடப் படாத படத்தில் நடிக்கும் தனுஷ் கௌரவ வேடத்தில் தோன்றும் படம் சீடன். மலையாளத்தில் ரிலீஸான நந்தனம் ரீமேக்கான இதை சுப்பிரமணியம் சிவா இயக்குகிறார். பிரசாத் லேப்பில் அமைக்கப்பட்ட அரங்கில் படப்பிடிப்பு நடக்கி றது. கௌரவ வேடத்தில் நடிப்பது ஏன் என்று கேட்கிறார்கள். நான் சிவபெருமானின் தீவிர பக்தன். சீடன் படத்தில் சிவன் வேடம் ஏற்க வேண்டும் என்று சுப்பிரமணியம் சிவா சொன்னார். உடனே ஒப்புக்கொண்டேன் என்றார் தனுஷ்.

## 'புரட்சி தளபதி' பட்டம் எனக்கு வேண்டாம்!



விஜய்க்கு இளைய தளபதி, பரத்துக்கு சின்ன தளபதி, விஷாலுக்கு புரட்சி தளபதி பட்டங்கள் பயன்படுத்தப்பட்டது. கோலிவுட்டின் லேட்டஸ்ட் பஷன் ஹீரோக்கள் தாங்களாக முன்வந்து பட்டப்பெயர் போடாதீங்க என்பதுதான். விஷாலும் தன் பங்குக்கு சொல்கிறார்.

என் பேருக்கு முன் பட்டப் பெயர் போடுங்கள் என்று சொன்ன தில்லை. ரசிகர் மன்றத்தினர் போடுகிறாங்கள். அன்பு மிகுதியால் ஆர்வத்தால் இப்படி செய்வதை தடுக்க முடியுமா? இருந்தாலும் இனிமேல் புரட்சி தளபதி பட்டத்தை பயன்படுத்த மாட்டேன் என்றார் விஷால்.

## ரம்பாவின் நிச்சயதார்த்த மோதிரம் ரூ.3 கோடி



கனடா மேஜிக் வுட்ஸ் நிறுவன உரிமையாளர் இந்திரன் ரம்பா காதல் திருமணம் மார்ச் மாதம் திருப்பதியில் நடக்கிறது. மார்கழி 27 ஆம் திகதி சென்னையில் அவர்களது திருமண நிச்சயதார்த்த விழா சென்னை அடையாறு கேட் ஹோட்டலில் நடந்தது. கனடா மேஜிக் வுட்ஸ் நிறுவனம் ரம்பாவை தங்கள் கம்பெனி விளம்பர தூதுவராக நியமித்தது.

அந்நிறுவன உரிமையாளர் இந்திரன் ரம்பாவுக்கு ஒன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள காரை அன்பளிப்பாக வழங்கினார். இதனால் இந்திரனுக்கும் ரம்பாவுக்கும் இடையில் காதல் மலர்ந்தது. இருவரும் திருமணம் செய்ய முடிவு எடுத்தனர். இதையடுத்து மார்கழி 27 ஆம் திகதி ரம்பா- இந்திரன் திருமண நிச்சயதார்த்தம் திருப்பதி கோயி லில் நடந்தது. இந்நிலையில் நிச்சயதார்த்தம் அன்று இந்திரன் ரம்பாவிற்கு அணிவித்த மோதிரம் ரூ.3 கோடி என வெளியான செய்தி ஹோலிவுட்டை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

## திரை விமர்சனம்

# குட்டி



கல்லூரியில் ரவுடிசம் செய்து அனைவரையும் மிரட்டி வைத்திருக்கிறார் தியான். இவர் எம்.பி. ராதாரவியின் மகன். கல்லூரிக்கு புதிதாக வரும் ஸ்ரேயாவை விரும்புகிறார். தனது காதலை அவர் ஏற்க மறுப்பதால், தற்கொலை செய்வதாக மிரட்டுகிறார்.

பயந்துபோகும் ஸ்ரேயா, அவரது காதலை ஏற்கிறார். அப்போது அதே கல்லூரியில் சேரும் தனுஷ், ஸ்ரேயாவை காதலிக்கிறார். இதை அறிந்து தனுஷை எச்சரிக்கிறார் தியான். " உங்கள் காதலுக்கு நடுவே நான் வரவில்லை. ஸ்ரே யாவை காதலிப்பது எனது சொந்த விடயம். அவரிடம் பதிலுக்கு காதலை எதிர்பார்க்கவில்லை. உன் காதல் மீது உனக்கு நம்பிக்கை இருந்தால் என் வழியில் வரக்கூடாது என்கிறார் தனுஷ்.

அதற்கு ஒப்புக்கொள்கிறார் தியான். ஆனால் மகனின் காதலை ஏற்க மறுக்கிறார் ராதாரவி. காதலியின் காதலை சேர்த்து வைக்கப் போராடுகிறார் தனுஷ். தியானுடன் ஸ்ரேயா சேர்ந்தாரா? தனுஷின் காதல் என்ன ஆனது என்பது கிளைமாக்ஸ்.

துறு துறு கல்லூரி மாணவராக வருகிறார் தனுஷ். தியான் & ஸ்ரேயா பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென அவர்களுக்கு நடுவே புகுந்து, 'ஐ லவ் யூ' சொல்லும் அந்த முதல் காட்சியிலேயே பரபரப்பை ஏற்படுத்துகிறார். தனுஷை அடித்து நொறுக்க வரும் தியானிடம் சாதுர்யமாகப் பேசி " உன் லவ் மேல உனக்கே நம்பிக்கை இல்லையா" என உசுப்பிவிடுவது அடிதடி இல்லாத மூளைச்சண்டை.

உடல்நிலை சரியில்லாத ஸ்ரேயாவைப் பார்க்க தியான் செல்லும்போது அவருடன் வந்து ஒட்டிக்கொள்கிறார் தனுஷ். பழங்களை வாங்கிச் செல்ல யோசிக்கும்போது " நீ இருக்கும்போது பழம் கொடுத்து ஸ்ரேயாவை கவரப்பார்க்கிறாயோ" எனச் சொல்கிறார் தனுஷ்.

அதனால் வெறும் கையுடன் தியான் செல்ல, மறைத்து வைத்திருந்த பழங்களை எடுத்து ஸ்ரேயாவிடம் தனுஷ் தருவது ரொமான்டிக் டெக்னிக். தனுஷ் காதலுக்கு தியான்தான் வில்லன் என நினைக்கும்போது, ராதாரவியின் கரக்டர் விஸ்வரூபம் எடுப்பது திருப்பம். தியானை நிஜமாகவே ஸ்ரேயா காதலிக்கிறார் இல்லையா என்பதை சரியாக சொல்லாதது மைனஸ்.

கல்லூரி மாணவர்கள் என்றாலே பெண்களைக் கலாய்ப்பது, ரவுடிசம் செய்வது என்பது சலித்துப்போன போர்முலா. ஸ்ரேயாவின் காதலை அவரது குடும்பம் ஏற்றதா என்பதையும் கூறவில்லை. வின்சென்ட் அசோகனை தனுஷ் தாக்கியதும் படம் முடிவது போல் தெரிகிறது. ஆனால் அதற்குப் பின் கிளைமாக்ஸுக்காக காட்சிகளை இழுக்கின்றனர்.

கல்லூரி மாணவன் வேடத்தில் கச்சிதமாய் பொருந்துகிறார் தனுஷ். தனது காதலை ஸ்ரேயா புரிந்துகொள்ளவே இல்லையே என குமுறும்போது நடிப்பில் ஸ்கோர் செய்கிறார். ஆக்ஷன் காட்சிகளில் யதார்த்தம் பார்த்திருக்கிறார் தனுஷ். தியானை ஏற்பதா, தனுஷின் உண்மையான காதலை ஏற்பதா என தவிக்கும்போது ஸ்ரேயா மனதைத் தொடுகிறார். எந்தக் காட்சியிலும் கவர்ச்சி இல்லாமல் புது ஸ் ரேயாவாகவும் வருகிறார்.

வில்லத்தனம் கலந்த செகண்ட் ஹீரோவாக வருகிறார் தியான். நம்பிக்கை வரவு. ஸ்ரீநாத்தின் காமெடி கமென்ட் ரசிக்கும்படி இல்லை.

பாலசுப்பிரமணியனின் ஒளிப்பதிவு காட்சிகளை அழகாக தந்திருக்கிறது. தேவிஸ்ரீ பிரசாத்தின் இசையில் பாடல்கள் சுமார் ரகம். ஆக்ஷன் காட்சிகளில் ஆக்ரோஷத்தை கூட்டியுள்ளார் தளபதி தினேஷ்.



குட்டி: சுட்டி




ஒரு ஹீரோயினைப் பிடிப்பதே பிரம்ம வித்தையாக இருக்கும் சினிமாவில் ஒரே படத்துக்கு மூன்று ஹீரோயின்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். செவன்த்சேனல் கம்யூனிகேஷன்ஸின் " முந்தினம் பார்த்தேனே " இயக்குநர் மகிழ் திருமேனி.

ஹீரோ சஞ்சயும் புதுமுகம் தான் என்கிற அளவில் அறிமுக ஹீரோவுக்கு மூன்று ஹீரோயின்கள் தாங்குமா என்றால், " நான் எடுத்துக்கிட்ட கதைப்படி தாங்கும்... " என்றவர் தொடர்ந்தார்.

"இந்தக் கதை ஒரு ஆணை மூன்று பெண்களோ, இல்லை மூன்று பெண்களை ஒரு ஆணோ காதலிக்கிற கதை இல்லை. இது வேறகளம். இயல்பான இளைஞர் சமுதாயத்துக்குள்ள போனா, நட்புக்குத்தான் முதலிடம் இருக்கும். இன்னும் நீளமாகப் போனா நட்புக்குள்ளேயே வித்தியாசங்கள் இருக்கும். எல்லாரிடமும் எல்லா விடயங்களையும் பகிர்ந்து கொள்ளமாட்டோம். ஒவ்வொருத்தருக்கும் ஒரு எல்லை வச்சிருப்போம்.


இன்றைக்கு ஆண்களுக்கு ஈடாக பெண்களும் தோழமையோட பழகிறாங்கள். பெண்கள் கூட இருக்க நட்புக்கும் இது மாதரி எல்லைகள் உண்டு. அத்தோடு காதல் என்கிறதும் அப்படித்தான். பழகிற எல்லாப் பெண்களையும் காதலிச்சிட முடியாது. இதனால் மூன்று பெண்களோட அவசியம் வந்தது. மூன்று பேரும் ஹீரோகூட பழகிறாங்கள்.

அதில் யார் யார் எவ்வளவு தூரம் வர்றாங்க, யார் காதலியா ஆகிறாங்கள் என்பது தான் கதை.

ஹீரோ சஞ்சய் மென்பொருள் வார்ப்புன்னாலும் நம்மைப் போல் சராசரி இளைஞனா தெரிவார். இசைதொடங்கி இளமை தூக்கலா தெரிகிற படமான இதை தோழன், தோழி கூட உட்கார்ந்து பார்க்கலாம்.

காதலிகூட உட்கார்ந்து பார்க்கலாம். இரண்டும் இல்லாதவங்க குடும்பத்தோட பார்க்கலாம். எந்த வன்முறையும், வரம்பு மீறலும் இல்லாமல் படத்தை ரசிக்க வைக்கமுடியும். என்னோட முயற் சிக்கு வெற்றிதான் அங்கீகாரத்தைத் தர வேண்டும்.

# விஜய் நடிக்கும் சுறா ஏப்ரலில் வெளிவரும்



விஜய் நடிக்கும் " சுறா" படத்தை சன் பிக்சர்ஸ் வாங்கியுள்ளது. விஜய் நடித்து, சன் பிக்சர்ஸ் வெளியிட்ட படம் "வேட்டைக்காரன்" மெகா ஹிட்டான இந்தப் படத்தை அடுத்து, விஜய் நடிக்கும் 50 ஆவது படம் "சுறா" இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் வாங்கியுள்ளது. இந்தப் படத்தில் விஜய் ஜோடியாக தமன்னா நடிக்கிறார். எஸ். பி.ராஜ்குமார் இயக்கி வருகிறார்.

இயற்கை, கந்தசாமி படங்களின் ஒளிப்பதிவாளர் ஏகாம்பரம் ஒளிப்பதிவு செய்கிறார். மணிசர்மா இசை அமைக்கிறார். தெலுங்கில் ஹிட்டான 'மகதீரா' படத்தின் வில்லன், தேவ் கில் இந்தப்படம் மூலம், தமிழில் வில்லனாக அறிமுகமாகிறார்.

ஆக்ஷன் படமான இதில், சண்டைக் காட்சிகளில் விஜய் அதிக ரிஸ்க் எடுத்து நடித்துள்ளார். வடிவேலுவுடன் இணைந்து காமெடியிலும் விஜய் கலக்கியுள்ளதாக பட வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடல் காட்சிகள் வெளிநாடுகளில் படமாகிறது. இதுவரை இல்லாத அளவு, விஜய் படங்களிலேயே அதிக பிரமாண்டமாக இந்தப் படம் தயாரிக்கப்படுகிறது. இப்படத்தை ஏப்ரலில் சன் பிக்சர்ஸ் வெளியிடுகிறது.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### தேர்வும் தெரிவும்

உண்மை உரிமையை
உள்ளத்துணர்வை
பாடும் பொருளாக்கி
வாடும் மக்களின்
துயர்கள் தீர
குறைந்த வரிகளில்
நிறைவைத்தர
புனைய வேண்டும்
கவிதையொன்று
இனிய கட்டளை
இதன் பலனாய்
இறுதித் தேர்வில்
எல்லை தாண்டியவை
தொல்லைப்படும்
இலகுவாக மற்றவை
இலக்கியமாகி
அச்சுவாகனத்தில்
ஊர்மெச்ச உலகெங்கும்
உலாவரும்

க.நாகராசா
(நுணாவில்)

### எங்கே அமைதி

மழைகள் பெய்யவில்லை
மண்குளிர
நாட்டில் அமைதி இல்லை
நாடு செழிக்க
எங்கு பார்த்தாலும் அவலக்குரல்
எங்கு பார்த்தாலும்
அகதிமுகாம்
ஓடினேன் இறைவனிடம்
அதோ
இறைவனும் அகதிகளில்
ஒருவனாய்!

செ.வினுஷா
(சித்தங்கேணி)

### வேரில்லா விருட்சங்கள்

முட்கம்பி வேலிக்குள்
முகம் புதைத்த
அவளின்
கண்ணீர்
பூமித்தாயில் பட்டுத் தெறித்து
துன்பமெல்லாம் திரண்டபோது
ஹெய்ட்டிப் பக்கம்
வெடித்துவிட்டாள்
வேதனை தாங்கமுடியாது

திருமதி இ.நவதர்சினி
(வயாவிளான்)

### பட்டாசு வெடியோசை படுத்தும் பாடு

பண்டிகை முடிந்தாலும்
பட்டாசு வெடிச்சத்தம் ஓயவில்லையே
எண்டிசை அதிர இங்கிப்போ
எழுகிறது பட்டாசு வெடிச்சத்தம்
கண்ட கண்ட இடமெல்லாம்
பட்டாசு எம்மைப் படுத்தும்
பாடுதான் என்னே

வீட்டில் தூங்க முடியவில்லை
வெளியில் நடமாடவும் முடியவில்லை
றோட்டில் பயணிக்க முடியவில்லை
கேட்டால் பொத்து என்றே
கேலிக்கை பண்ணுராரே
வெடிபோடும் வீரரின்
வீம்புத்தனத்தை யாரறிவார்
மாரடைப்பு வியாதி உடையவர்கள்
மனைவாழும் நோயாளர்

போராடிப் போராடி மாய்கின்றாரே
போடும் பட்டாசு வெடி ஓசையினால்
ஆரறிவார் இந்த அவலமதை
அதைநிறுத்த யார் முனைவார்
இவ்வாறு வெடியோசை
இன்றும் இங்கெழுந்தால்
எவ்வாறு நாம் இங்கு
எம்வாழ்வைத் தொடரலாம்...?

பரதேசி


### அறுவடையாகாத வலிகள்

ஆறு போல ஓடினோம்
அகதிகளாக
சமுத்திரத்துடன் சங்கமிப்பதற்கு
அல்ல - எம்
வாழ்க்கைப் பயணத்தை
தொடர்வதற்காக...
ஓலைக்குடிசைகள் எமக்கு
ஒத்தாசை நல்கின
கொட்டுக்கிணறுகள் தினம்
கொட்டித் தீர்க்கும் எம் தாகம்
எட்டிமோதும் அலைக்குள் தான்
எங்களின் வாழ்வாதாரம்
வங்கக் கடலில் தோன்றும் புயல்
எம் வயிறுவரை தொடரும்
புயல்கடந்தால்தான் எமக்கு
புதுவாழ்வு பிறக்கும்
கடல் ஏறிச் செல்வார் சிலர்
கரைசேர மாட்டார்
காத்திருந்த மனைவி பிள்ளை
கதறலோடு வீடுபோவார்
தினம் உப்பு நீரில் உறைந்தால்தான்
எங்களின் எதிர்காலம்
வன்னி அனர்த்தம் சிதைத்தது
எம் வாழ்க்கையை
இன்று வடக்கின் வசந்தம் வீசியதால்
சொர்க்கவாசல் திறக்கப்பட்டது
நாங்கள் மட்டும் வலிகள் சுமந்த
விழிகளோடு நலன்புரியில்

கே.தேவன்
(நலன்புரிநிலையம்
கைதடி)

# மௌனத்தின் தேடல் -0 4

## சங்குநாதம்



### மனிதர்கள் போல...

பகையை மனதில்
புதைத்துக்கொண்டு
படங்களுக்குப் போஸ்
கொடுப்போம் — நாங்களும்!
மனிதர்களே...
உங்களைப்போல...!

அருள்செல்வம்.
மண்கும்பான்

### காலமுமைக் கவிபாடும்

புரிந்துணர்வு உங்களுக்குள்
குடிகொண்ட பின்னாலே...
வருந்துயர்கள் எதுவெனினும்..
நிலைத்திடாமல் நீறாகும்
கலக்கமினித் தேவையில்லை
காலமுமைக் கவிபாடும்!

கவிஞர் சு.க.சிந்துதாசன்

இரு மனங்கள் ஒன்றுபட்டால்
இனங்களுக்குள் இல்லை வேற்றுமை
நாயாக இருந்தால் என்ன
பூனையாக இருந்தால் என்ன
இந்த அன்புக்கு இல்லை வேற்றுமை!

மீரா.அ
(குமாரசாமி வீதி, கந்தர்மடம்)

### ஒற்றுமைக்கு ஓர் உதாரணம்

பல் குழல் பாய்ச்சி
பல உயிர் பறித்த
பண்பற்ற மனிதகுலம்
பாடையில போனாலும்
பகுத்தறிவு அற்ற
உம்மைப் போன்று
ஒன்றுமையாய் வாழ
ஒரு நாளும் முடியாது.

ரி. நிலாமதி
(நலன்புரி நிலையம்
அல்லாரை.)

### ஐக்கியம்

ஐக்கியத்தின்
பக்கத்தில்
ஐந்தறிவு
ஜீவன்கள்
அந்நியப்படுத்தலின்
தூரத்தில்
ஆறறிவு
மனிதர்கள்.

க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

### திருந்துக

எதிர்த்து வெறுத்து
மோதிச் சாகும்
மூட மனிதர்களே
மன இருளை நீக்கி
ஒன்றாக வாழுங்கள்
எம்மைப் பார்த்தாவது திருந்துக.

சு. ஜெயசீலன்
யாழ். ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை.

### புதுயுகம் படைப்போமா?

ஓ ஆறறிவு மானிடனே!
நன்றிக்கு இலக்கணமான
ஐந்தறிவு ஜீவன்கள்
ஒற்றுமையை உபதேசிக்கும்
செல்லப்பிராணிகள்
புன்னகை தவழ விந்தை காட்டிடும்
மகுட சிற்பங்கள் போல்
இனமத ஜாதி யொழித்து மகிழ்வுடன்
புதுயுகம் படைப்போமா?

ஆ.இந்திரா
(ஆச்சிரமம் வதிரி)

நட்பின் சிகரத்தில்
பயணிக்கும் இவர்கள்
நட்புக்காவே பிறந்தவர்கள் போல
எங்கள் முன்னிலையில்...

நவரத்தினம் சதீஸ்
(கந்தர்மடம்)

அன்று நாம் பகை இனம்
இன்று இணைந்திருக்கும்
புதுஇனம்
என்றுதான் ஒன்றாகும்
தமிழினம்
எதிர்பார்த்து இருக்கிறோம்
கண்விழித்து

வ.காந்திமதிநாதன்
கொற்றாவத்தை

### வேதனை

விலங்காய் பிறந்திட்டோம் - என
வருந்திய எம் உள்ளம் - இன்று
வருந்தி தவிக்கும் மானிடரை
எண்ணிய போது.....
பேதமின்றி இணைந்த நம்
நட்பு தான் மேல் என்றது!

இ. சோபிதா
சண்டிலிப்பாய்.

### காத்திருக்கிறோம்

முடிந்தது! ஜென்ம பகைமை
நம் இனத்தில் - இனியாவது
சண்டை சச்சரவு இன்றி
சுதந்திரம் சமத்துவம்
சகோதரத்துவத்துடன்
வாழ வழிதான் பிறக்குமென
காத்திருக்கிறோம்

ஆர். கருணா
யாழ். பல்கலைக்கழகம்.

# மௌனத்தின் தேடல்- 05



அன்பு வாசகர்களே !
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.02.2010 ம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.
-ஆசிரியர் -

# வட.கிழக்கில் வங்கி கடன்களுக்கான வட்டி 12 வீதத்தில் இருந்து 9 வீதமாக குறைப்பு

## மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து தற்போது வழங்கப்படும் சில குறிப்பிட்ட வங்கிக் கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைக்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்,டி.எப்.சி.சி. வங்கி மற்றும் ஏனைய வங்கிகளுக்கும் விஜயம் செய்தார்.அவ்வேளை யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தினருடனும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அச் சந்தர்ப்பத்தில் ஆளுநரிடம் கடன் வட்டி வீதத்தை குறைக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டது. இதற்குத் தான் நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.




இதையடுத்து மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகப் பிரிவால் கடந்த 22 ஆம் திகதி இது குறித்து செய்திக் குறிப்பொன்று வெளியிடப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மத்திய வங்கியானது வட மாகாணத்துக்காக வடக்கின் எழுச்சி மற்றும் கிழக்கு மாகாணத்துக்காக கிழக்கின் அபிவிருத்தி என்ற இரண்டு விசேட கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த இரண்டு கடன் திட்டங்களையும் மத்திய வங்கி ;வடக்கு, கிழக்கில் வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்குடனே வழங்குவதாகவும்,

இவ் வட்டிக்குறைப்பானது 2010 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாகவும் வங்கி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம் ,கால்நடை வளர்ப்பு, மீன்பிடி மற்றும் சிறிய தொழில் முயற்சிகளுக்கு உதவியளிக்கும் வகையில் அதிக பட்சமாக இரண்டு இலட்சம் ரூபாய் வரை ஒருவருக்கு வழங்கப்படும்.இதன் மீள் செலுத்தும் காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.




இந்த இரண்டு கடன் திட்டங்களும் இலங்கை வங்கி ,மக்கள் வங்கி ,ஹற்றன் நஷனல் வங்கி, கொமர்ஷல் வங்கி ,

செலான் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி,சம்பத் வங்கி மற்றும் டி.எப்.சி.சி.வங்கி ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகப் பிரிவால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் முதன்மையான வர்த்தகப் பங்காளி

## ஐரோப்பிய ஒன்றியத் தூதர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் முதன்மையான வர்த்தகப் பங்குதாரர் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் பேர்ணாட் சாவேஷ் தெரிவித்தார்.

அண்மையில் அமெரிக்க வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் ,இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடுகளும் செயற்றிட்டங்களும் எனும் பொருளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது ,

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கியமான வர்த்தகப் பங்காளி.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் 3.55 பில்லியன் யூரோ பெறுமதியானது.இது இலங்கையின் மொத்த வியாபாரத்தின் 23.3 வீதமாகும். இலங்கை 2.24 பில்லியன் யூரோ பெறுமதியுடைய ஏற்றுமதியை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மேற்கொள்கிறது.இது இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 38 வீதமாகும்.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம்,(இந்தியாவுக்கு அடுத்தபடியான மிகப்பெரிய இறக்குமதி 2-வது பெரிய இறக்குமதிப் பங்காளி எனவும் அவர் சுட்டிக்காட்டினார். 1.31 பில்லியன் யூரோ பெறுமதியில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திடம் இறக்குமதியை மேற்கொள்கிறது.இது மொத்த இறக்குமதியில் 14 சதவீதமாகும் எனவும் தெரிவித்தார்.இதேவேளை ஆடைத் தொழிற்றுறை ஏற்றுமதியில் 54வீதம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கே ஏற்றுமதியாகிறது.இதன் வர்த்தகப் பெறுமதி 1.17 பில்லியன் யூரோக்கள் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐரோப்பிய ஒன்றியம் தற்போது இலங்கையில் அண்ணள்வாக 200 மில்லியன் யூரோ பெறுமதியுடைய அவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளது.சுனாமியால் முழுமையாக அழிவடைந்த வாகரை மகா வித்தியாலயம் 30 கோடி ரூபாய் செலவில் கட்டிக் கையளிக்கப்பட்டது.

மாத்தறை ,பொத்துவில் , அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் வீதி அபிவிருத்தி செயற்றிட்டமும் , அம்பாறையில் 400 கிலோமீற்றர் நீளமான பிரதேச வீதி அபிவிருத்தி செயற்றிட்டமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.65 | 115.22 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 183.48 | 187.12 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.35 | 161.91 |
| சுவிஸ் பிராங் | 107.44 | 110.03 |
| கனேடிய டொலர் | 106.36 | 109.02 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.37 | 104.03 |
| சிங்கப்பூர் டொலர் | 80.61 | 82.38 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.28 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.20 | |

## வர்த்தக செய்தித் துளிகள்

**ஜோன் கீல்ஸ் 3-ம் காலாண்டில் 863 மில்லியன் இலாபம்**

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் நிறுவனமானது 3ஆம் காலாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக 1500 மில்லியன் ரூபாய்களைப் பதிவு செய்துள்ளது.இது இதற்கு முந்திய ஆண்டுடன் ஒப்பிட்டால் 64 வீத அதிகரிப்பாகும் எனவும் 2009இன் முதல் 9 மாதங்களுக்கான தேறிய லாபம் 2830 மில்லியன் ரூபாயாகும் எனவும் ஜோன் கீல்ஸின் தலைவர் சுசந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

**இந்தியாவின் செல்போன் பாவனையாளர் 52 கோடி**

இந்தியாவில் முடிபடைந்த டிசம்பர் மாதத்தில் செல்போன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 52 கோடியைத் தாண்டியுள்ளது. நவம்பரில் 1.76 கோடியும் டிசம்பரில் 1.91 கோடியும் வாடிக்கையாளர்கள் அதிகரித்துள்ளனர்.

இதன்படி முறையே பார்தி ஏர்டெல்-11.80 கோடி , ரிலைன்ஸ் கம்யூனிக்கேசன் 9.40 கோடி , வோடபோன் -9.10 கோடி , ஐடியா செலூலர் -5.80 கோடி, டாட்டா ரெலிசேவிஸ் நிறுவனம் -5.70 கோடியும் பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல்.6. 28 கோடியும் ஏர்செல் 3.16 கோடியுடன் ஏழாவது இடத்திலுமாக பாவனையாளர்களைக் கொண்டுள்ளன.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3636.41 | 45.03 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4181.79 | 56.89 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1925.40 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : ஏசியன் ஹொட்டல்&புறப்பட்டிஸ்,கார்ஷன் , ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்,அற்கின் ஸ்பென்ஸ்,என்வெயர்மென்ரல் றிசோசஸ்.

***சரிவைக் காட்டிய பங்குகள்*** : சிறிலங்கா ரெலிகொம்,சிலோன் ரொபாக்கோ ,டிஸ்ரிலறிஸ் ,லங்கா ஐ.ஓ.சி.,சன்சைன் ஹோல்டிங் .

# பத்திலொரு அமெரிக்கருக்கு வேலையில்லை; பி.பி.ஓ.பணி ஒப்படைப்புக்கு வரிச்சலுகை ரத்து

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவிப்பு

இன்றைய நிலையில் பத்தில் ஒரு அமெரிக்கருக்கு வேலையில்லை. இதை மாற்றும் பொருளாதார நடவடிக்கை தொடரும் என அமெரிக்க் ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார். ஒபாமா தான் பதவியேற்ற முதலாம் ஆண்டு நிறைவையொட்டி நிகழ்த்திய உரையில் கூறியதாவது,

இந்தியா ,சீனா மற்றும் ஜேர்மனி போன்றநாடுகள் கணிதம் மற்றும் அறிவியல் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. அவர்கள் தங்கள் உட்கட்டமைப்புகளை மீண்டும் உருவாக்குகின்றனர். தங்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் துறைகளில் தீவிரமாக முதலீடு செய்கின்றனர்.

பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடம் வகிக்கும். பொருளாதார சிக்கல்கள் முடிந்து விட்டன.கடினமான காலம் கடந்து விட்டது.அதன் பாதிப்புகள்தான் எஞ்சியுள்ளன.

நம் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் பிரச்சினைகளைக் கண்டறிய வேண்டும்.பொருளாதார மந்நிலை அமெரிக்கக் குடும்பங்களை பெரிதும் பாதித்தன.இப்பிரச்சினைகளை தீர்க்க 750 கோடி ரூபாயளவிலான திட்டம் ஒன்றை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.இத்தகைய நடவடிக்கைகளால் கடந்த 2 ஆண்டுகளாக ,இழந்த 70 இலட்சம் வேலை வாய்ப்புகளை திரும்பப் பெற்று விட முடியாது.நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சி அளிக்கும்,புதிய அடித்தளம் அமைப்பதே இதற்கான ஒரேவழி.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வேலைகளை வழங்கும்(வெளி ஒப்படைப்புபணி(BPO)) அமெரிக்க நிறுவனங்களுக்கான வரிச்சலுகையை ரத்துச்செய்ய இதுதான் சரியான தருணம். அமெரிக்காவுக்குள் வேலைவாய்ப்புகளை தக்கவைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளி நாட்டுக்கு வழங்கப்படும் வேலைகளால் பெரிய அளவில் பயனடையும் நாடு இந்தியா.எனவே இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறை பெருமளவில் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை இந்தியாவின் 2008/2009ஆம் ஆண்டு இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தியில் தகவல் தொழில்நுட்பத் துறையின் பங்கு 5.8 சதவீதமாகும்.97/98 ஆம் நிதியாண்டில் இது 1.2சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**2009-ல் 212 மில்லியன் பேர் வேலையற்றோர்**

2009இல் 212 மில்லியன் பேர் வேலைவாய்ப்பில்லாமல் உள்ளனர்.இது 2007ஆம் ஆண்டை விட 34 மில்லியன் அதிகரிப்பாகும்.

இதேவேளை ஒவ்வொரு ஆண்டும் 45 மில்லியன் பேர் உலக வேலைவாய்ப்புச் சந்தையில் புதிதாக நுழைகின்றனர்.அதைச் சமாளிக்கும்படியாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும் என உலக தொழிலாளர் அமைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கு.முருகதாஸ்

# உயர்நீதிமன்றில் நேரில் ஆஜராக அனுமதி கேட்கும் நளினி



(சென்னை)

தனது விடுதலை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம் நேரில் ஆஜராக அனுமதிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு நளினி தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட வழக்கில் நளினிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனையைக் குறைக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டதை அடுத்து ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. இந்நிலையில் கடந்த 2006ஆம் ஆண்டு வேலூர் சிறை அதிகாரிகளுக்கு நளினி ஒரு கடிதம் எழுதியிருந்தார். தனக்கு முன்கூட்டியே விடுதலை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதில் கூறியிருந்தார்.

அதன் அடிப்படையில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் நளினியை விடுதலை செய்ய தமிழக அரசு மறுத்துவிட்டது.

ஆலோசனைக் குழு சரிவர அமைக்கப்படவில்லை என்றும் சரியான குழுவை அமைக்க வேண்டும் என்றும் சென்னை மேல் நீதிமன்றில் நளினி மனுத்தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி தரப்பிலும் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. கைதி ஒருவருக்கு ஒரு முறைதான் தண்டனையைக் குறைக்க முடியும் என்றும் தண்டனை குறைப்புக்காக 2ஆவது முறை விண்ணப்பித்து கருணை கேட்க முடியாது என்றும் சுப்பிரமணியசுவாமி தனது மனுவில் கூறியிருந்தார்.

இந்நிலையில் நளினியின் விடுதலை தொடர்பாக ஆலோசனைக் குழு கூடியது. எனவே சுப்பிரமணியசுவாமி சென்னை உயர் நீதிமன்றில் ஆஜராகி தனது மனு மீதான விசாரணை முடிந்து தீர்ப்பு அளிக்கப்படும் வரை நளினிக்கு ஆலோசனைக் குழு மூலம் விடுதலை வழங்க அனுமதிக்கக் கூடாது என்று வாதிட்டார்.

மேலும் தனது மனுவை விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் தர்மாராவ், பால்வசந்தகுமார் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் நளினி சம்பந்தமாக கூறப்பட்ட ஆலோசனைக் குழுவின் தீர்மானமோ அல்லது பரிந்துரைகளோ இன்னும் அரசுக்கு வந்து சேரவில்லை. அது வந்து சேருவதற்கு இன்னும் சில நாட்கள் ஆகும். அதன் பிறகு அமைச்சரவை போன்ற உயர் மட்ட அளவில் ஆலோசிக்கப்பட்டு அதன் பிறகே நளினியின் விடுதலை தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் என்று வாதிடப்பட்டது.

சுப்பிரமணியசுவாமியின் மனு மீதான விசாரணையும் முடிந்த பிறகே நளினியின் விடுதலை பற்றி முடிவெடுக்க அனுமதிக்க வேண்டும் என்று அவர் தரப்பில் வாதிடப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த வழக்கு விசாரணையை பெப்ரவரி மாதம் 5ஆம் திகதிக்கு நீதிபதிகள் தள்ளி வைத்தனர்.

இதற்கிடையில் வேலூர் சிறையில் இருந்து சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எச்.எல். கோகலேவுக்கு நளினி 2 வரிகளில் தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தனது விடுதலை தொடர்பான வழக்கு விசாரணையின்போது நேரில் ஆஜராகுவதற்கு தன்னை அனுமதிக்க வேண்டும் என்று நளினி கூறியுள்ளார். இந்த தந்தி நகலை தலைமை நீதிபதி எச்.எல்.கோகலே சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு அனுப்பிவைத்தார் எனத் தெரிகிறது. (2-6)

## சுதந்திரதினக் கொண்டாட்டம் கண்டியில்

(கொழும்பு)

எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் 62 ஆவது சுதந்திர தின வைபவம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகை பிரதேசத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார். பொலிசாரினதும் முப்படையினர்களதும் கண்காட்சிகள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் விசேடமாக இடம்பெறவுள்ளன.

இதேவேளை 'தேசத்தின் மகுடம் கண்காட்சியும் கண்டி பள்ளேகலையில் அன்றைய தினம் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (2-6)

## புதிய பஸ் சேவைகள்

(கொழும்பு)

நாட்டின் 4 பிரதான மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணம் வரை அரை சொகுசு மற்றும் ஆசன முன்பதிவு பஸ்சேவைகளை அடுத்த மாதம் நடுப்பகுதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இதற்கமைய கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதான நகரங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தனியார் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக ஏற்கனவே விலை மனு கோரப்பட்டுள்ளது. இந்த விலை மனுக்களை பரிசீலனை செய்யும் நடவடிக்கை இம்மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கான தனியார் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

மேலும் தூரப் பிரதேச சேவை என்பதால் யாழ்ப்பாணம் வரையான சாதாரண பஸ் சேவைகளை மக்கள் அதிகம் விரும்புவதில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-2)

# அரசாங்கம் உடனடியாக அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளது

## லக்ஸ்மன் யாப்பா

(கொழும்பு)

அரசாங்கம் உடனடியாக அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதுடன் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவில்லை எனில் ஒருமாத காலத்திற்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளப் போவதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார். அரசாங்கம் எவ்வாறான திருத்தங்களை முன்வைக்கப்போகிறது என அவர் தெரிவிக்கவில்லை என்றார்.

மேலும் எதிரணியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடு காரணமாக வடக்கு-கிழக்கு மக்கள் பொது வேட்பாளருக்கு ஆதர



வளித்திருப்பதாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் சிறுபான்மை இன மக்களின் நம்பிக்கையை வெல்ல அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் எனக் கூறினார். ஜனாதிபதியின் வெற்றிக்கு தென்பகுதி மக்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# தொழிற்சங்க அலுவலகங்கள் அழிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள அகில இலங்கை பொதுப் போக்குவரத்து ஊழியர் சங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சங்க அலுவலகங்கள் சுதந்திர ஊழியர் சங்கத்தின் குண்டர்களால் தீயிடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புறக்கோட்டை, நாராஹேன்பிட்டி, மொரட்டுவ, உடஹமுல்ல, பண்டாரவளை, பதுளை, கண்டி போன்ற இடங்களில் உள்ள தொழிற்சங்கங்கள் தாக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க பிரதேச காவற்துறையினர் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் காவற்துறை மா அதிபரிடம் முறையிடத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கைப் பொதுப் போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார். அகில இலங்கைப் பொதுப் போக்குவரத்து ஊழியர் சங்கம் ஜே.வி.பி.யின் தொழிற்சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# மக்களின் ஆணையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்வைக்கவேண்டும்

## வாசுதேவ நாணயக்கார கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை உட னடியாக கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தி அரசியல மைப்பை மாற்றுவதற்கான பொதுமக்கள் ஆணையைப் பெறு வதற்கான நடவடிக்கை களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுக்க வேண் டும் என்று ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். அதேவேளை தமிழ், முஸ் லிம், சிங்கள மக்களிடையேயுள்ள இடை வெளியை நிரப்புவதற்கு அவசரத் திட்ட மொன்றை நடைமுறைப்படுத்த வேண்டு மென்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் வெற்றி தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தனக்கு வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்கள் அனைவருக்கும் தனது கடமைகளை நிறைவேற்றுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே தமிழ், சிங்கள மக்கள் பழிவாங்கப்படுவார் கள் என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவ் வாறான பொய்ப் பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாந்து விடக்கூடாது.



அதேவேளை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு ஜனாதிபதி நடைமுறை சாத் தியமான திட்டத்தை உடனடியாக அமுல் படுத்த வேண்டும். அம்மக்களின் நம்பிக்கை யைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அத்தோடு உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தி அரசியலமைப்பு மாற்றத்திற்கான பொதுமக்கள் ஆணையைப் பெற வேண்டும். அரசியலமைப்பு சபையையும் ஏற்படுத்த வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் அரசிலுள்ள இனவாதிகள், மதவாதிகள் அனைவரும் மக்களால் ஓரங்கப்படுவார்கள். நாட்டில் தற்போது தலைதூக்கியுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை குறைப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். (2-6)

# போதைப் பொருட்களுடன் ஈரான் பிரஜை கைது

(கொழும்பு)

போதைப் பொருட்களுடன் இலங்கை வந்த ஈரான் பிரஜை ஒருவர் சுங்கத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 9 கிலோ கிராம் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

இப்போதைப் பொருள் 45 மில்லியன் பெறுமதியானது. கடந்த 26ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக கடத்தப் பட்டு நாட்டுக்குள் கொண்டு செல்ல முற்பட்ட வேளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது ஈரானிய பிரஜை போதைப் பொருளைக் கைவிட்டு தப்பி ஓடிவிட்டார். பின்னர் அவரின் உடமைகளைச் சோதனை செய்தபோது போதைப் பொருட் கள் கண்டுபிடிக்கப்பட்டது.


தப்பியோடிய ஈரானிய பிரஜை தொடர்பாக தொடர்ந்து சோதனை மேற்கொண்டபோது கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (2-9)



05

# இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் சோமவன்ச அமரசிங்க மற்றும் டில்வின் சில்வா ஆகியோரால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**



ராஜீவ்காந்தி

இதன் காரணத்தால் காமினி ஜய சூரிய அமைச்சரவையிலிருந்து வெளி யேறினார். டிக்ஸித் அவரோடும் பேச்சுக் கள் நடத்தியுள்ளார். இந்தியா கேட்பதை யெல்லாம் கொடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் காமினி ஜயசூரிய உறுதி யாக இருந்தார்.

இது ஒருகாட்டிக்கொடுப்பு, கண்டி ஒப்பந் தத்துக்குப் பின்னர் நடக்கும் காட்டிக் கொடுப்பு எனக் கூறினார். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை எவ்வாறிருந் தது என்பதை அறிந்துகொள்ள டிக்ஸித் தின் இந்த நூல் உதவியாக இருக்கி றது.

இவற்றைப் பற்றி அறிந்துகொள்ளு முன் சீக்கியரின் பொற்கோயிலைப் பற்றி மீண்டும் பேசவேண்டியிருக்கிறது. தமது பொற்கோயிலுக்குள் இரத்தம் சிந்த வைத்த இந்திராகாந்தி அம்மையாரை அவர்கள் விட்டு வைக்கவில்லை. அவரு டைய பாதுகாப்புக்காக இருந்த சீக்கியரொ ருவர் தனது துப்பாக்கியால் இந்திராகாந்தி அம்மையாரைப் படுகொலை செய்தார். சீக்கியர்கள் கௌரவத்தோடு வாழக்கூடிய வர்கள். அவர்களது தன்மானத்துக்கு களங்கம் ஏற்படக்கூடிய எதையுமே செய்யமாட்டார்கள்.

இந்தியர்களிலேயே அவர்கள் தனி யாக வெட்டித் தெரிவது தமது சுயமரி யாதையை உயர்வாகக் கொள்வதால் தான். ஆகவே தான் பொற்கோயிலுக் குள்ளே மேற்கொண்ட படுகொலைகளுக் காக பழிவாங்கினார்கள். இந்திராகாந்தி அம்மையார் கொலை செய்யப்பட்ட பின்னர், ராஜீவ் காந்தி பதவிக்கு வந்தார். அம்மாவின் கொள்கை தவறானது எனக் கண்ட ராஜீவ்காந்தி, சில மாற்றங் களைக் கொண்டு வந்ததாக டிக்ஸித் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். என்றா லும் முழுமையான மாற்றம் ஏற்பட வில்லை. இந்திய – இலங்கை ஒப்பந் தத்தை இலங்கை மீதாக திணித்தவர் ராஜீவ் காந்தி. அவரும் பிரிவினைவாதி களால் படுகொலை செய்யப்பட்டார். இங்குவந்த இந்தியப்படைக்கு என்ன நடந்தது. 150 படைவீரர்களை இழந்து, இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல நேரிட் டது.


இந்தியா கௌரவத்தை இழந்தது. பிரதமரொருவரை இழந்தது. இலங்கைத் தமிழ் மக்களோடு நட்பை வளர்த்துக் கொள்ளவும் அவர்களால் முடியவில்லை. சிங்கள முஸ்லிம் மக்களோடு நட்பு கொள்ள முடியவில்லை. அனைத்து நண்பர்களையும் இழந்தனர். அன்று இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்கும் நிலையில் மக்கள் இருந்தனர். இவ்வா றான இந்திய வெளியுறவுக் கொள்கை யோடு நாம் மோதினோம். இங்கிலா ந்து இந்தியாவில் தலையிட்டபோது, இங்கி லாந்தின் உற்பத்திப் பொருட் களை இந்திய மக்கள் பகிஷ்கரிக்க முடியுமா யிருந்தால், இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்க எமக்கும் முடியுமாயிருக்க வேண்டும்.

இனி, ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதிலிருந்து சற்று திரும்பிப் பார்ப்போம். அவர்களால் வளர்க்கப் பட் டடா ராஜீவ் காந்தியைக் கொன் றது. என்றாலும், பிரிவினைவாத பயங்கரவா திகளுடனான தொடர்பை அவர் கள் கைவிடவில்லை. இந்தியாவின் உளவுச் சேவையான "றோ" அன்று போல் இன்றும் தொடர்பு வைத்திருக் கின்றது. இதன் காரணத்தால் இந்தியாவில் பாரிய எதிர்ப்பலைகள் தோன்றின. எதிர்த்த மக்கள் அடக்கப்பட்டனர். அடக்குமுறை சட்டங்கள் கொண்டுவரப்பட் டன. இறுதியாக இந்திராகாந்தி அம்மை யார் மரணித்துவிட்டார். அதற்கான நட்ட

விலகிச் சென்றது தான் இதற்குக் காரணம். தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் நோக்கில் அண்டை நாடுகளோடு பகை மையை வளர்த்துக்கொண்டது.

வீ.பீ.சிங் ஆட்சியமைத்த பின்னர், ஐ.கே. குஜ்ரால் அண்டை நாடுகளோடு ஆதிக்க மனப்பாங்கோடு நடந்து கொள்ளவில்லை. எவ்விதத்திலும் பலவந்தத்தைப் பிரயோ கிக்க எண்ணவில்லை. அவருடைய வார்த்தைகளால் சொல்வதாயிருந்தால் "எமது அயலவர்களுடனான தொடர்பு எமக்கு இன்றிய மையாததாகும்" ஏன் அவ்வாறு கூற வேண்டும். அவை தான் சமாதானத்தின், ஒத்துழைப்பின், சௌ பாக்கியத்தின் அடையாளம்.

இந்தப் பிராந்தியத்தில் எமது நட்புறவு நிலைக்குமானால், அது அது எமக்கும் நல்லது அண்டை நாடுகளுக்கும் நல்லது. அண்டை நாடுகளின் சுபீட்சத்துக்கும் நல்லது. அதுமாத்திரமல்ல, குஜ்ரால் சித் தாந்தம் என்ற ஒன்றையும் அவர் அறி முகப்படுத்தினார். (Gujral Doctorin) உண்மையிலேயே அது ஒரு சித்தாந்தம் தான். அதனால் தான் இந்தியப் படை



விடுதலை முன்னணிக்கும் தெரியாது. அவை ஒவ்வொன்றாக இப்போது வெளி வந்து கொண்டிருக்கின்றன.

சார்க் மாநாட்டுக்கு ஒரு வாரத்துக்கு முன்னர் இந்தியாவிலிருந்து மூன்று பிரமுகர்கள் இலங்கைவந்தனர். இந்தி யாவின் தேசிய பாதுகாப்பு தொடர்பாக ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளி யுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்பு செயலாளர் விஜேசிங் ஆகி யோரே அவர்கள்.

இந்தியாவை வழி நடத்துபவர்கள்



குஜ்ரால்

இவர்கள் தான். இவர்கள் இந்தியாவை தவறான வழியில் இட்டுச் செல்வது தெரி கிறது. அந்த மூவரும் இங்கு வந்து இரகசியமாக பேச்சுவார்த்தையில் ஈடுபட் டனர்.

கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை. இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிக ளும், இந்திய அரசாங்கத்தின் அதிகாரி களும் இலங்கையின் ஜனாதிபதியும், அமைச்சர் களும் பேச்சுக்கள் நடத்தி னர்.

ஈட்டை ராஜீவ்காந்தி செலுத்தினார். அதிகா ரத்திலிருந்து இறக்கப்பட்டார். வீ.பீ.சிங் பிரதமரானார். இந்திரகுமார் குஜ்ராலை தனது வெளியுறவு அமைச்சராக நிய



வீபீசிங்

மித்தார். பிரதமரான வீ.பீ. சிங்கும், வெளியுறவு அமைச்சர் குஜ்ராலும் பாண்டுங் மாநாட்டில் கொண்டு வரப்பட்ட பஞ்சசீலக் கொள்கைகளை நடை முறைப் படுத்தினார்கள்.

அக்காலத்தில் தன்னை சுற்றியிருந்த நாடுகளோடு இந்தியா நட்பாக இருக்க வில்லை. பாகிஸ்தான், பங்களாதேஷம், இலங்கை, நேபாளம் போன்ற நாடுக ளோடு பகைமை பாராட்டியது. நேபாளத்தி லிருந்து பங்களாதேசத்துக்கு இந்திய வான்வழியூடாக விமானங்களை பறக்க விடவில்லை.

ஆகையால் 2000 மைல் சுற்றி நேபா ளத்துக்குச் செல்ல வேண்டிய நிலை பங்களாதேச விமானங்களுக்கு ஏற்பட்டது. அடுத்ததாக, பங்களாதேசத்தை பிரிப்பதில் இந்தியா தலையிட்டது. பாகிஸ்தானோடு யுத்தம் செய்தது. பல யுத்தங்களைச் செய் தது.

எதிரிகளை உருவாக்கிக் கொண் டது. பஞ்சசீலக் கொள்கையில் இருந்து களை இலங்கையிலிருந்து விலக்கிக் கொண்டார். இந்தியப்படை இலங்கைக்குத் தேவையில்லை என்பதை உணர்ந்தார். விலக்கிக்கொண்டார். குஜ்ரால் இவ்வாறு கூறினார்.

We Need neighbours Who are developping at least as fast as us "

" இந்தியா அயல் நாடுகளை அடிமைப் படுத்தவேண்டியதில்லை. எமது அயல வர்கள் எம்மைப்போன்று அபிவிருத்திய டைந்தவர்களாக இருக்கவேண்டும்" எனது அரசாங்கமோ ஒருபோதும் குழம் பிய குட்டையில் மீன்பிடிக்கப்போ வதில் லை" " I do not seek to fish in trouble waters. But assist the countries of the subcontinet to achieve pease and stability for it is in India's interest too." அயல் நாடுகளின் எந்தப்பிரச்சினையிலும் தலையிடுவதில்லை, எனினும் பிரச்சி னையொன்று இருக்கும் பட்சத்தில் அத னைத் தீர்ப்பதற்காக எமது உயர்ந்த பட்ச ஒத்துழைப்பை . வழங்குவோம். இந்த உபகண்டத்தில் நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது வேறெதற்காகவுமல்ல, அது தான் சிறந்தது.

அயலவர்கள் நட்போடு இருந்தால், அவர்களுக்கு அமைதி கிடைக்குமானால், நாம் அவர்களோடு சமாதானமாக இருப் போமானால் அனை வருக்கும் நல்லது. இந்தியாவுக்கும் நல் லது. இதுதான் வீ.பீ. சிங், குஜ்ரால் போன்றோரின் வெளி யுறவுக் கொள்கை.

பல தடவைகள் மீண்டும்மீண்டும் ஆட்சி யைப் பிடித்த காங்கிரஸ் கட்சி, இந்திரா காந்தி அம்மையாரின் வெளியுறவுக் கொள் கையான ஆக்கிரமிப்புவாத, ஆதிக்க வாத வெளியுறவுக்கொள்கைகளையே பின்பற்றுவதாகத் தெரிகிறது. அன்று டிக்ஸித் கூறியதைப்போன்று, இந்திர குமார் குஜ்ராலும், வீ.பீ.சிங்கும் ஆட்சி யிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், பல்வேறு ஒப்பந்தங்களை இலங்கை மீது இந்தியா திணித்துக் கொண்டிருக் கிறது.

எத்தனை - ஒப்பந்தங்கள் செய்யப்பட் டிருக்கின்றன என்று தெரியாது. மக்கள்

**சோமவன்ச அமரசிங்க**
தலைவர், மக்கள் விடுதலை முன்னணி

கூட்டறிக்கை வெளியிடப்படவில்லை. வெளிநாட்டிலிருந்து யாராவதொரு அரசி யல் பிரமுகர் இங்கு வந்து பேச்சுவார்த் தைகளில் ஈடுபட்டால், என்ன பேசப்பட்டது என்பதைப் பற்றிய அறிக்கையொன்றை கூட்டாக வெளியிடவேண்டும். இங்கு வந்த உயரதிகாரிகள் என்ன பேசினார் கள் என்பது இலங்கை மக்களுக்குத் தெரியவேண்டும்.

அதேபோன்று இந்திய மக்களுக்கும் தெரிய வேண்டும். ஆனால் அது நடக்க வில்லை. இதில்ஏதோ மர்மம் இருப்ப தாகத் தெரிகிறது. (தொடரும்)

# செவ்வாயில் இப்போதைய பருவகாலம்?



செவ்வாய்க் கிரகம் இப்போது உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது. அங்கு கடல் இருப்பது விஞ்ஞானிகளின் ஆவலைத் தூண்டி உள்ளது.

பல நாடுகளும் செவ்வாயை ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. இங்கிலாந்து விஞ்ஞானிகள் சமீபத்தில் நடத்திய ஆய்வு முடிபுகள் புவியியல் விஞ்ஞானப் பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருக்கிறது.

அதில் கூறப்பட்டுள்ள சில முக்கியமான விடயங்கள் வருமாறு,

- செவ்வாயில் தற்போது நிலவும் ஈரப்பதம் மற்றும் குளிர்ந்த சூழல் ஹெஸ்பேரியன் ஈபோக் எனப்படுகிறது. இது பூமியில் நிலவும் பனிக்காலம் போன்ற சூழலைக் கொண்டது.
- செவ்வாயின் மத்திய ரேகைக்கு அருகில் 20 கிலோ மீற்றர் அகலமுள்ள ஏரி இருந்துள்ளது. 3 பில்லியன் (100 கோடிகள் சேர்ந்தது ஒரு பில்லியன்) ஆண்டுகளுக்கு முன் பனிப்பாறைகள் உருகி இந்த ஏரி உருவாகி இருக்கக் கூடும்.
- இந்த ஏரியின் ஆயுளை வைத்துப் பார்க்கும் போது செவ்வாயில் தற்போது காணப்படும் உலர்ந்த பருவமாற்றம் ஏற்கனவே கணிக்கப்பட்ட காலத்துக்கு பின்னரே நிகழ்ந்திருக்க வேண்டும்.

அதாவது 3.8 முதல் 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் செவ்வாய் இத்தகைய மாற்றங்களை அடைந்திருக்கும்.

இங்கிலாந்தின் இம்பீரியல் கல்லூரி மற்றும் நாசாவின் செவ்வாய் ஆய்வுக்குழு இணைந்து இந்த ஆய்வை நடத்தி உள்ளன.

ஆய்வுக் குழுவின் தலைவரான இம்பீரியல் கல்லூரியைச் சேர்ந்த நிக்கோலஸ் வார்னர் கூறும் போது செவ்வாயின் தற்போதைய பருவகாலம் முக்கியமாக கவனிக்கப்படுகிறது. இதுதான் செவ்வாயில் பனிப்படலம் உருவாகியதற்கான காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எங்கள் ஆய்வு முடிபு செவ்வாய் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கும் என்றார்.

# மலேரியாவை தடுக்கும் தாவரம்!

மரபணுக்களான ஜீன்களின் அமைப்பை பட்டியலிடுவதுதான் தற்போதைய அறிவியல் உலகின் தலைசிறந்த பணி. வருங்கால சந்ததிகளுக்கு பழையவற்றை நினைவுபடுத்தும் விதமாக எல்லா விடயங்களையும் ஆவணப்படுத்துவோம். அதுபோலத்தான் ஜீன்களையும் பட்டியலிடுவதும்.

இதனால் வியாதிகளை முழுமையாகக் குணப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க முடியும். அதுமட்டுமல்லாது தாவரங்கள், உயிரினங்களில் தேவையான பண்பு மாற்றங்கள், இனமாற்றங்கள் செய்வதற்கும் இவை கைகொடுக்கும்.

இதனால் உலகையே புதுமையாக மாற்றமுடியும். இருந்தாலும் இயற்கைக்கு மாறான மாற்றங்களை உருவாக்குவதன் மூலம் தகாத விளைவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் இந்த முறைக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் உண்டு.



இந்திய விஞ்ஞானிகள் கூட சமீபத்தில் மரபணு பட்டியல் தயாரித்து சாதனை படைத்தார்கள். இதுபோன்ற பணி உலகெங்கும் நடந்து வருகிறது.

இதில் தாவரங்களில் மரபணுக்களை பட்டியலிட்டு ஆய்வு செய்த போது மலேரியாவுக்கு ஒரு தாவரத்தில் இருந்து தீர்வு கிடைக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அந்தத் தாவரத்தின் பெயர் ஆர்ட்டிசீமியா அன்னுயா. இந்தத் தாவரத்தின் மரபணுக்களை பட்டியலிட்ட யார்க் பல்கலைக்கழக ஆய்வுக் குழு இந்த உண்மையைக் கண்டறிந்துள்ளது.

மலேரியாவைத் தடுக்கும் இந்தச் செடிகள் குறைந்த அளவே உள்ளன. எனவே இவற்றை பதியமிட்டு அதிகளவில் உற்பத்தி செய்வதன் மூலம் மலேரியாவுக்கு தீர்வு காண முடியும் என்று நம்பப்படுகிறது.

2012 இற்குள் இந்தச் செடியில் இருந்து சிறந்த தடுப்பு மருந்து கண்டுபிடிக்க ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்த ஆய்வுக்கான நிதி வசதியை பில்கேட்ஸ் தம்பதியினர் வழங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




# புவி வெப்பமடைதலை கட்டுப்படுத்தும் செம்மறி ஆடுகளின் 'ஏப்பம்'!

புவி வெப்பமடைதலைத் தடுக்க உலகெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மனிதனுக்கும், இயற்கைக்கும் நடக்கும் இரகசிய யுத்தம் இது.

பல்வேறு வழிகளில் புவி வெப்பமாவதைத் தடுக்க முயற்சிகள் நடந்து வருகிறது. செம்மறி ஆடுகளின் ஏப்பம், புவி வெப்பமாவதைத் தடுப்பதாக தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் செம்மறி ஆடுகள் கூட்டுறவு ஆராய்ச்சி நிலைய ஆய்வுக்குழு இதைக் கண்டுபிடித்துள்ளது.

பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வைக் கட்டுப்படுத்துவதில் சில விலங்கினங்கள் நமக்கு உதவுகின்றன. குறிப்பாக மீத்தேன் வாயுவைக் கட்டுப்படுத்துவதில் இவை பங்காற்றுகின்றன. மாடுகள் இந்தப் பணியில் உதவுவதாக ஏற்கனவே அறியப்பட்டிருந்தது. தற்போது இந்தப் பட்டியலில் செம்மறி ஆடுகளும் சேர்ந்துள்ளன.

செம்மறி ஆடுகளின் குடல் பகுதியில் வாழும் நுண்ணுயிரிகள், மீத்தேன் வாயுவை அதிகமாக சுவாசிக்கின்றன. குறிப்பாக ஆடுகள் ஏப்பமிடும் சமயத்தில் அதிகப்படியான மீத்தேன் உள்ளிழுக்கப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட அளவில் காற்றில் மீத்தேன் அளவு உறிஞ்சப்படுவதால் புவி வெப்ப மடைவது தடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக அவுஸ்திரேலிய ஆய்வுக்குழு ஆடுகளில் பல்வேறு செயற்கை மாற்றங்களை ஏற்படுத்தி ஆய்வு செய்து வருகிறது. அங்குள்ள ஆடு மேய்க்கும் இடையர்களையும் ஊக்குவித்து வருகிறார்கள்.



ஏனெனில் ஆடுகள் அதிகம் ஏப்பமிட்டால் நமக்கு ஏற்படும் ஆபத்துக் குறையுமே!

# தானியங்கி மின் அழுத்தி

"ஆள்பாதி ஆடை பாதி" என்பார்கள். ஒருவர் நேர்த்தியாக உடை அணிந்து வர பின்புலத்தில் உதவியாக இருப்பது மின் அழுத்தி (அயர்ன் பாக்ஸ்).

ஆடையை அழகாக அழுத்தி மடிப்பது ஒரு கலை என்று சொல்லலாம். மின்னழுத்தியால் ஆடையை தேய்க்கும்போது துணி கருகிய அனுபவம் பலருக்கு இருக்கலாம். அவசர கதியில் உபயோகிப்பது, அணைக்காமல் மறந்து விடுவது, கவனமின்றி பயன்படுத்துவது போன்ற காரணங்களால் மின் அழுத்தியின் வெப்பம் துணியை கருக்கி விடும்.

இந்த தானியங்கி மின் அழுத்தியில் அப்படி எதுவும் நடந்து விடாது. அது சூடாக இருக்கும்போது வைப்பதற்கு தனி இடம் தேட வேண்டாம்.பெட்டியை விட்டு நாம் கையை விலக்கினால் போதும், சென்சர் செயல்பட்டு தானாக ஒரு குமிழ் கீழ்நோக்கி வந்து மின் அழுத்தியை தளத்திலிருந்து சற்று உயர்த்தி நிறுத்தி விடும்.

இதனால் துணிகள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படும்.



அதேபோல 8 நிமிட நேரம் தொடர்ந்து மின் அழுத்தியை பயன்படுத்தாவிட்டால் தானாகச் சுவிட்ச் ஓப் ஆகி குளிரத் தொடங்கி விடும்.

இனிமேல் கவலையின்றி அனைவரும் அழகாக ஆடை தேய்க்கலாம்!

# குரங்குகள் தயாரித்த குறும்படம்!

ஆச்சரியமாக இருக்கிறதா! உண்மைதான் குரங்குகள் தாங்களாகவே நடித்து ஒரு குறும்படத்தை தயாரித்துள்ளன.

விலங்குகள் விசேட குணம் மற்றும் திறன் கொண்டவை. இதில் குரங்குகள் அநேக விடயங்களில் மனிதனை ஒத்திருக்கும். குறிப்பாக கற்றுக் கொடுக்கும் விடயங்களை சரியாகப் புரிந்துகொண்டு செயற்படுவதில் மற்ற விலங்குகளை விட குரங்குகள் முன்னிலையில் உள்ளன.

அப்படி பயிற்சி அளித்ததில் தேர்ச்சி பெற்ற குரங்குகள் ஒரு குறும்படத்தை தயாரித்தன. இந்தப்படம் சில அடிநீளமே இருக்கிறது. ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பர்க் மிருகக் காட்சி சாலையில் உள்ள குரங்குகள் நடித்து தயாரித்துள்ளன.

இந்தப் படத்தில் 11 சிம்பன்சி குரங்குகள் இடம்பெறுகின்றன. குரங்குகளுக்கென்று விசேடமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு கமரா மூலம் ஒரு குரங்கு காட்சிகளை பதிவுசெய்தது.

பல ஒத்திகை முயற்சிகளுக்குப் பின்னர் கடுமையாகப் போராடியே காட்சிகள் பதிவு செய்யப்பட்டன. இதில் குரங்குக் கடி மற்றும் சண்டைகள், சேட்டைகள் தத்ரூபமாக படம்



பிடிக்கப்பட்டுள்ளன.

"சிம்ப்கேம்" என்ற இந்தத்திட்டத்தில் பயிற்சி அளித்த ஹெரல்கோ என்பவர் கூறும்போது, காட்சிகளை படம் பிடிக்கும் கமராவை கையாளுவதில் மட்டுமே குரங்குகள் சிரமம் எடுத்துக்கொண்டதாக தெரிவித்தார். இந்தக் குறும்படம் காட்டு விலங்குகளின் வாழ்க்கையை படம்பிடித்த சான்றாக திகழும் எனவும் கூறினார்.

1800 அமெரிக்க டொலர் செலவில் இந்தப்படம் தயாரானது. இந்தக் குறும்படம் பி.பி.சி. 2 சனலில் பனானாவிஷன் என்ற பெயரில் ஒளிபரப் பானது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதிகளின் போராட்டத்திற்கு எந்த வகையிலும் உதவமாட்டோம்

## கிறிஸ்மஸ்தீவில் அந்நாட்டு அமைச்சர்

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ்தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் மேற்கொண்டுவரும் அமைதிப் போராட்டத்திற்கு எந்தவகையிலும் உதவி வழங்கப்படமாட்டாது என்று அந்நாட்டு குடிவரவு அமைச்சர் கிறிஸ் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

அகதிகளின் கோரிக்கையை பரிசீலனை செய்ய எடுக்கும் காலதாமதத்தை ஆட்சேபித்து 133 அகதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் இவான்ஸ் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; கிறிஸ்மஸ்தீவிலுள்ள ஒவல் மைதானத்திலும் பொழுது போக்குப் பிரதேசத்திலும் கூடியுள்ள அகதிகள் அவர்களது மண்டபங்களுக்குத் திரும்பிச் செல்ல மறுத்து வருகிறார்கள். எவ்வாறாயினும் இவர்களது போராட்டம் எவ்வகையிலும் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவமாட்டாது. இந்த வகையான போராட்டங்களுக்கு நாங்கள் செவிசாய்க்கப் போவதில்லை என்பதை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றார்.

அகதிகள் செயற்பாட்டு கூட்டமைப்பு பேச்சாளர் இயன்றின் ரூல் கருத்துத் தெரிவிக்கையில்; மாற்றங்கள் அமுலுக்கு வரும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளார். (2-6)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் தரம் -1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் அருகில் அதிபர் செல்வி ந. பிரதா நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட கையேடு ஒன்று வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இந்த கல்வி ஆண்டில் சில புதிய பட்டதாரி பயிற்சி நெறிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (2-6)

# யாழில் உயர்ஸ்தானிகராலயம் அமைக்கும் திட்டமில்லை

## இந்திய உயர்ஸ்தானிகர்

யாழ்ப்பாணத்தில் உயர்ஸ்தானிகராலயம் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை என இந்திய உயர்ஸ்தானிகர் தினகர் அஸ்தானா தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு மற்றும் புனர் நிர்மானப் பணிகளுக்கு இந்தியா பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இந்திய உயர்ஸ்தானிகராலயக் காரியாலயமொன்று அமைக்கப்படவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# றோட்டறக்ட் கழகம் நடாத்தும் கூடைப்பந்தாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ ஏயார் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினரால் கூடைப்பந்தாட்டப் போட்டி (2009-2010) நடாத்தப்படவுள்ளது.

மேற்படிப் போட்டிகள் ஆண்-பெண் இரு பாலருக்குமாக பாடசாலை மட்டத்திலேயே இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிரல் ஒழுங்கு ( Draw ) நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் வைத்து ஒழுங்கமைக்கப்படவுள்ளதால் இந்தப் போட்டிக்குரிய பாடசாலைகளை தவறாது சமூகம் தருமாறு மேற்படி கழகத்தினர் கேட்டுள்ளனர். (2)



மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணர் சின்னஞ்சூட்டும் விழாவில் சாரணர் ஒருவருக்கு அதிபர் வே. உதயமோகன் கழுத்துப்பட்டி அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஆந்திராவில் ஆற்றில் படகு கவிழ்ந்து 45 பக்தர்கள் பலியானார்கள்

ஆந்திராவில் கிழக்கு கோதாவரியில் உள்ள கோவிலுக்கு ஆலய வழிபாட்டுக்காக 45 பக்தர்கள் நேற்று காலை படகில் சென்றனர். கோதாவரி ஆற்றைக் கடந்து அவர்கள் சென்று கொண்டு இருந்தபோது திடீர் என்று படகு கவிழ்ந்தது. இதில் 45 பக்தர்களும் தண்ணீரில் மூழ்கினார்கள்.

உடனே மீட்புப் படையினர் விரைந்து சென்றனர். ஆற்றில் மூழ்கிய 10 உடல்களை மீட்டனர். ஏனைய 35 பேரைக் காணவில்லை. அவர்கள் ஆற்றில் மூழ்கிப் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. தொடர்ந்து உடல்களைத் தேடும் பணி நடக்கிறது. மீதம் உள்ள 35 பேரும் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என்று மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

கவிழ்ந்த படகில் 30 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். ஆனால் கூடுதலாக அதிகம் பேரை ஏற்றியதால் படகு கவிழ்ந்ததாகக் கூறப்படுகிறது. (2-6)

# பிராந்திய நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களின் குறை நிலைகளை தீர்த்து வைப்பதற்கு சிறிலங்கா மக்கள் கட்சியின் யாழ். அலுவலகம் பதினொரு பிராந்திய நிலையங்களை யாழ். மாவட்டத்தில் நிறுவுவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அக்கட்சியின் வன்னி மற்றும் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் திலக்குமார உடுகம தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் கட்சி அலுவலகத்தில் தற்போது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் வறுமைப்பட்டவர்கள் போன்றவர்களின் தேவைகள் மற்றும் தடுப்பு முகாமில் உள்ளவர்களை விடுவிப்பதற்கும் என தினமும் 750 பதிவுகள் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2- 30)

## டெங்கு நோய் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ் மருத்துவ பீட மாணவர்களினால் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களை பரிமாறும் கலந்துரையாடல் நிகழ்வு நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## சுதந்திர தினத்துக்கான அறிவுறுத்தல்

நாட்டின் 62ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சகல அரச நிறுவனங்களிலும் எதிர்வரும் 3, 4ஆம் திகதிகளில் தேசியக் கொடியேற்றி அலங்கரிக்குமாறும் 4ஆம் திகதி காலை 8.50 மணிக்கு தேசிய கொடி ஏற்றியும் 8.52 மணிக்கு தேசிய கீதம் இசைக்கு மாறு யாழ். அரச அதிபர் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளார். (2-19)

## கல்விமாணி விரிவுரைகள்

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப் பட்ட நெறிக்கான விரிவுரைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப் பட்ட நெறி இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (2)

**AHAVOLI**

**Institute for Higher Studies offers a Diploma course in Peace Building & Community Development Practice**

The applications are called for this course. This is a one year, week – end (Saturday & Sunday) course that consists of 240 hours. The applicants should have the following prerequisites to apply for this course:

1. Knowledge of English as to read, write, and speak
2. A pass in Advanced Level
3. Interested in Social Activities

Chances also would be given to those who are working in the institutions and NGOs. The candidates will have to buy a special form from our office and submit it before the 9th of February 2010. Only 25 candidates will be selected for this course.

**N.B. The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway.**

For further details please contact:

**'AHAVOLI'**
Institute for Higher Studies
Affiliated to National University of Ireland, Galway
St. Patric's Road, Jaffna
Contact No: 021 2222856 (531)

# மாடிக்குடியிருப்பு இடிந்து வீழ்ந்தது; பெல்ஜியத்தில் 9 பேர் பலியாகினர்



பெல்ஜியத்தில் மாடிக் குடியிருப்புக் கட்டிடமொன்று இடிந்து விழுந்ததில் குறைந்தது 9 பேர் பலியானதுடன் 21 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு பெல்ஜியத்தில் லியஜ் நகரிலுள்ள மேற்படி 5 மாடிக் குடியிருப்பு கட்டிடத்தில் ஆரம்ப கட்டத்தில் பாரிய வெடிப்புச் சத்தமும் தீயும் ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து சுமார் 5 மணித்தியாலம் கழித்து கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது.

இந்நிலையில் மேற்படி கட்டிடத்துக்கு அண்மையிலுள்ள ஏனைய கட்டிடங்களும் இடிந்து விழலாம் என்ற அச்சத்தில் மீட்புப் பணிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த மாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்திற்கு எரிவாயுக் கசிவே காரணமென நம்பப்படுகிறது.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த வெடிப்புச் சம்பவத்தால் அதற்கு 100 மீற்றர் தொலைவிலுள்ள நகர மண்டபத்தின் ஜன்னல் கண்ணாடிகளும் உடைந்துள்ளன.

தீ ஏற்பட்டதையடுத்து அங்கிருந்து பெருமளவானோர் வெளியேறியதால் அதிகளவான உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆரம்ப கட்ட தேடுதல்களின் போது இடிபாடுகளின் கீழிருந்து 13 வயது சிறுமியொருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். மாடிக் குடியிருப்புக்கு அருகிலுள்ள ஏனைய கட்டிடங்களும் இடிந்து விழலாம் என எச்சரிக்கப்பட்டதையடுத்து தேடுதல் பணிகள் தற்காலிகமாக கைவிடப்பட்டன.

இடிபாடுகளின் கீழ் 12 பேருக்கும் அதிகமானோர் சிக்கியிருப்பதாக நம்பப்படுகிறது. (2-6)



பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஹெயிட்டியில் வீடுகளை இழந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் கொண்டு போய் சேர்ப்பதில் தொடர்ந்து சிக்கல் நிலவுகிறது. நிவாரணப் பொருட்களைக் கைப்பற்றுவதற்காகப் பலரும் மீன்பிடிப் படகுகளில் சென்று கப்பலை முற்றுகையிடுவதைப் படத்தில் காணலாம்.

# தாய்வானுக்கு ஆயுத விற்பனை அமெரிக்காவுக்கு சீனா எதிர்ப்பு

தாய்வானுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என சீனா நேற்றுச் சனிக்கிழமை எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. சுமார் 6.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுதங்கள் தாய்வானுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய அமெரிக்கா தவறான முடிவினை எடுத்துள்ளதாக சீன வெளியுறவுத்துறை நேற்று குற்றஞ்சாட்டியுள்ளது. சீனா தனது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அது தொடர்பில் இதுவரை அமெரிக்க பதிலளிக்கவில்லை என சீனாவுக்கான அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர் சுசான் ஸ்டெவென்சன் தெரிவித்துள்ளார்.

மேலும் யுஎச். 60 எம் ரக விமானங்கள் 60 உள்ளிட்ட ஏராளமான யுத்த ஆயுதங் கள் இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(2-6)

# ஈராக் யுத்தம் தொடர்பான விசாரணையில் டோனி பிளேயர் சாட்சியம்

(லண்டன்)



ஈராக் யுத்தம் தொடர்பான விசாரணையில் பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் சாட்சியம் வழங்கியுள்ளார்.


ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைன் தொடரும் ஒரு அச்சுறுத்தலாக மாறிவந்தார். ஆதலால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பிரிட்டனும் அமெரிக்காவும் தயாராக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று டோனி பிளேயர் கூறியுள்ளார்.

சதாம் ஹூசைன் தொடர்பான பிரிட்டனின் நிலைப்பாடு 11 செப்டம்பர் 2001 அன்று அமெரிக்கா மீது அல்கொய்தா தாக்குதல் நடத்தியதையடுத்து பெரிதும் மாறிவிட்டிருந்தது என்று பிளேயர் குறிப்பிட்டார்.

போக்கிரி நாடுகள் பேரழிவு ஆயுதங்களை உருவாக்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்புள்ளது. இல்லாவிட்டால் இவ்வகையான ஆயுதங்கள் பயங்கரவாதக் குழுக்களின் கைகளில் சென்று சேர்ந்துவிடும் என்று அவர் குறிப்பிட்டார். (2-6)

# பெருவில் பாரிய வெள்ளப்பெருக்கு

# மண்சரிவு அபாயமும் ஏற்படுமென அச்சம்



பெருவில் பாரிய வெள்ளப் பெருக்கின் காரணமாக வீதிகளும் புகையிரதப் பாதைகளும் துண்டிக்கப்பட்டதையடுத்து அங்குள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க மச்சு பிச்சுவுக்கு அருகிலிருந்து சுமார் ஆயிரத்து 400 சுற்றுலாப் பயணிகள் உலங்கு வானூர்திகள் மூலம் மீட்கப்பட்டனர்.

அதேசமயம் சுமார் 800 சுற்றுலாப் பிரயாணிகள் மேற்படி பிராந்தியத்தில் தொடர்ந்து சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மச்சு பிச்சு தளத்தைப் பார்வையிட வருடாந்தம் 4 இலட்சம் பேர் வரை வருகை தருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 15 வருட காலத்திலில்லாத பாரிய மழைவீழ்ச்சி தற்போது ஏற்பட்டுள்ள நிலையில் இந்த தளமானது இன்னும் பல வாரங்களுக்கு மூடப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. மச்சு பிச்சு சின்னங்கள் அமைந்துள்ள குன்றின் அடிவாரத்திலுள்ள அகுவஸ்கலியன்டஸ் நகரிலிருந்தே மேற்படி சுற்றுலாப் பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் வெள்ளம் காரணமாக அப்பிராந்தியத்திலுள்ள பலர் வீடுவாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இப்பிரதேசத்தில் பாரிய மண் சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)




# இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்ட கனேடிய மாணவி நாடு திரும்பினார்

இந்தோனேசியா கடலில் கரை ஒதுங்கியிருக்கும் கப்பலில் இருந்து தமிழ் அகதிகளைச் சந்தித்து அவர்களுக்கு உதவி செய்ய அந்த நாட்டுக்குச் சென்றிருந்த ரொறன்ரோ பல்கலைக்கழக மாணவி ஜெசிக்கா சந்திரகேசகர் இந்தோனேசியா அதிகாரிகளால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்ட பின்னர் நேற்று சனிக்கிழமை கனடாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

ஜெசிக்கா தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் அவரது கடவுச்சீட்டு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. இந்தோனேசியா மொழியில் எழுதப்பட்ட ஒரு ஆவணத்தில் கையெழுத்திடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். ஊடகவியலாளர்களோடு பேசக்கூடாது என எச்சரிக்கப்பட்டார். ஜெசிக்கா இந்தோனேசியா நாட்டு வெளியுறவு அமைச்சின் மூத்த அதிகாரிகளோடு பேசிக் கப்பலில் கரையொதுங்கிய 254 தமிழ் அகதிகளுக்கு வேண்டிய மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொடுக்கவே அங்கு சென்றிருந்தார்.

அவர் தனது கைது குறித்து பேசுகையில்: மனிதாபிமான உதவி செய்யப் போன என்னை அவர்கள் கைது செய்வார்கள் என நான் நம்பியிருக்கவில்லை. ஆனால் அதைவிட மோசமான செயல் இந்த அகதிகள் உணவு, தண்ணீர், பாதுகாப்பு எதுவும் கொடுக்கப்படாமல் இந்தக் கப்பலில் அவர்கள் நடத்தப்படும் விதம் கவலை அளிக்கிறது என ஜெசிக்கா தான் விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.

கடந்த 100 நாட்களுக்கு மேலாக ஒரு கப்பலில் இந்த புகலிட கோரிக்கையாளர்கள் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் ஆபத்தில் இருக்கிறார்கள். ஒரு அகதி கோரிக்கையாளர் மருத்துவ கவனிப்பு மறுக்கப்பட்ட நிலையில் இறந்துவிட்டார். இன்னொருவருக்கு போரில் பட்ட விழுப்புண்ணுக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்படுகிறது.

இந்தப் கப்பலில் 31 சிறார்களும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் போதிய உணவு, மருந்து, மருத்துவக் கவனிப்பு இல்லாது துன்பப்படுகிறார்கள். (2-6)

# சூரிய நமஸ்காரம் உடலுக்கு நல்லதா? புனேயில் டாக்டர்கள் ஆய்வு

சூரிய நமஸ்காரம் செய்வதால் அறிவியல் ரீதியாக உடலுக்குப் பயன் கிடைக்கிறதா என ஆராயும் முயற்சியில் புனேயைச் சேர்நத சில டாக்டர்கள் ஈடுபட்டுள்ளனர். சூரிய நமஸ்காரம் என்னும் யோகப் பயிற்சி முறை நம் நாட்டில் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. அதிகாலை நேரத்தில் உடலை முன்னோக்கியும் பின்னோக்கியும் அசைத்து செய்யும் இந்தப் பயிற்சி உடற்பயிற்சி போன்றதே. இதைத் தொடர்ந்து செய்வதால் உடலுக்கு பயன் கிடைக்கும் என நம்பப்படுகின்றது. மேலும் இரத்தத்தில் சக்கரையின் அளவை கட்டுப்படுத்துவதாகவும் உடல் பருமனைக் குறைப்பதாகவும் கூறப்படுகிறது. பெங்களூர் இந்திய அறிவியல் கழகத்தைச் சேர்ந்த சுப்ரம ஜோசிஸ் நரிஸ்பூர் ஓம்கார் என்ற இன்ஜினியர் இது தொடர்பான செயல் முறை ஆய்வை மேற்கொண்டார்.

அவர் கூறுகையில்; தொடர்ந்து 120 சூரிய நமஸ்காரம் செய்வதால் ஒருவரின் உடலில் 350 கிலோ கலோரி குறையும். இது டிரெட் மில்லில் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்வதற்கு சமம். மேலும் உடலுக்குத் தேவையான ஒக்சிஜன் பரிமாற்றம் சீராகும் என்றார்.

இதை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்து பார்ப்பது என்ற நோக்கத்துடன் புனேயைச் சேர்ந்த டாக்டர் குழு ஒன்று களம் இறங்கியுள்ளது. 500 டாக்டர்கள் மைதானத்தில் தினமும் சூரிய நமஸ்காரம் செய்து இதனால் உடலுக்குப் பயன் கிடைக்கிறதா என ஆய்வு நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

புனேயைச் சேர்ந்த இந்திய மருத்துவ கழகத் தலைவர் டாக்டர் திலிப் சர்தா கூறியதாவது; சூரிய நமஸ்காரப் பயிற்சியை தொடங்குவதற்கு முன் அதில் பங்கேற்போர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். அவர்களின் எடை, இரத்தத்தில் சக்கரையின் அளவு உள்ளிட்ட பல்வேறு சோதனைகள் நடத்தி அவை பதிவு செய்யப்படும். பின்னர் சூரிய நமஸ்கார பயிற்சி முடிந்ததும் உடலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து மீண்டும் சோதனை நடத்தப்படும். இவ்வாறு திலிப் சர்தா கூறினார்.

(2-6)

இரண்டு வழுக்கைத் தலையர்கள்- ஏன் ஒரு சீப்புக்காகச் சண்டை செய்ய வேண்டும்.
- ரஷ்யா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தேர்தல் நடந்தது இலங்கையில் வென்றது இந்தியா; தோற்றது அமெரிக்கா

ஜனாதிபதித் தேர்தல் இலங்கையில் நடந்தாலும் அந்தத் தேர்தலில் இந்தியாவும், அமெரிக்காவும் போட்டி போட்டமை விசித்திரமான உண்மை.

எக்காலத்திலும் இல்லாத வகையில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவும், அமெரிக்காவும் கரிசினை காட்டியமை, இலங்கைத் திருநாட்டில் அமைதி நிலவுவதற்கும்- இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவதற்குமான வாய்ப்பு கடினமானதென்பதையே சுட்டிநிற்கின்றது.

இலங்கையின் அண்டை நாடான இந்தியா தனது அரசியல் இலாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு இலங்கையின் களநிலையை காய்நகர்த்துகின்றது.

இந்தக் காய் நகர்த்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதல் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி வரை அகப்பட்டுக் கொண்ட உண்மையை மறுப்பதற்கில்லை.

கலைஞர் கருணாநிதி தமிழகத்தில் தனது குடும்ப அரசியலைக் காப்பாற்றுவதை மையமாகக் கொண்டு இந்திய மத்திய அரசின் உள்நோக்கம் உணர்ந்திருந்தும், தாளம் போடக் கற்றுக் கொண்டார்.

ஈழத் தமிழர்களின் விடயத்தில் அவரின் தப்புத்தாளங்கள் பல இடங்களில் பளிச்சிட்ட போதிலும், தனது குடும்ப அரசியலுக்குப் பங்கம் ஏற்பட்டுவிடலாகாதென்பதில் மட்டுமே அவர் கண்ணாயிருந்தார்.

இதனால் ஈழத் தமிழர்கள் என்றுமில்லாதவாறு துன்பப்பட்ட போது வெறும் நடிப்பைத் தவிர வேறு எதனையும் அவரால் செய்ய முடியவில்லை.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமிழந்த, ஒற்றுமையில்லாத அமைப்பாகி ஒருவரையொருவர் தூற்றித் விமர்சிக்கும் துன்பத்திற்கு ஆளாகியது.

இவர்களிடம் இருக்கக் கூடிய ஒற்றுமையீனம்,பக்கம்சாயும் நேர்மையீனம் என்பவற்றை இந்தியா தகுந்த முறையில் பயன்படுத்திக் கொண்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரும் இந்தியாவுக்கு சென்று மத்திய அரசுடன் பேசுவோம் என்பதே தேர்தலுக்கு முன்பான கூட்டமைப்பின் அறிவித்தலாகும்.

இதிலிருந்து இந்தியாவின் காய் நகர்த்தல் எப்படியிருந்தது என்பதை ஊகிக்க முடியும்.

இதேநேரம் சரத் பொன்சேகாவை ஆதரித்த அமெரிக்கா தனது தோல்வியைப் பெரிதுபடுத்துவதற்கப்பால், சரத் பொன்சேகாவின் பாதுகாப்பை வலியுறுத்தும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் ஜனாதிபதித் தேர்தல் இலங்கையில் நடந்திருந்தாலும், அது இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்குமான போட்டியாகவும்-இந்தியாவின் வெற்றியாகவும் அமைந்ததென்பதே உண்மையாகும்.

# டெங்கு காய்ச்சல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களில் டெங்கு காய்ச்சல் மீண்டும் தீவிரமடைய ஆரம்பித்திருப்பதால் பொது மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 25ஆம் திகதி வரையும் 2 ஆயிரத்து 592 பேர் இக் காய்ச்சலுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகியுள்ளனர் எனவும் அவ்வட்டாரங்கள் கூறின. இருந்த போதிலும் கடந்த வருடம் டெங்கு காய்ச்சலுக்கு 34ஆயிரத்து 896 பேர் உள்ளாகியுள்ளனர். இவர்களில் 345பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன. இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

நாட்டின் சில பிரதேசங்களில் டெங்கு காய்ச்சல் மீண்டும் தீவிரமாக தொடங்கியுள்ளது. அவற்றில் கொழும்பு, கம்பஹா, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இந்நோய் வேகமடைந்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி முதல் 25ஆம் திக்தி வரையும் கொழும்பு மாவட்டத்தில் 339 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 381 பேரும் யாழ். மாவட்டத்தில் 351 பேரும் வவுனியா மாவட்டத்தில் 259 பேரும் இக் காய்ச்சலுக்கு உள்ளானவர்களாக பதிவாகியுள்ளனர்.

ஆகவே சுற்றாடலை சுத்தமாகவும் நீர்தேங்க முடியாதபடி உலர் நிலையிலும் வைத்திருப்பதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். டெங்கு காய்ச்சல் நுளம்புகளால் தான் பரப்பப்படுகின்றது.

அதனால் நுளம்புகள் பல்கிப் பெருக முடியாதபடி கழிவுப் பொருட்களை முறையாக அகற்றி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருப்பது அவசியம் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2-6)

# இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## மனித உரிமைகளுக்கான கிறிஸ்தவ அமைப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என மனித உரிமைகளுக்கான கிறிஸ்தவ அமைப்பு கோரிக்கையை விடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நிலையில் இந்த கோரிக்கையை விடுத்துள்ள அமைப்பின் இணைப் பாளர் வணக்கத்துக்குரிய ஜெபமாலை ராஜா இலங்கையின் நடவடிக்கைகளையும் இந்தியா அவதானிக்க வேண்டும் எனக்கேட்டுள்ளதுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக ஆவண செய்யுமாறு இந்தியா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோர வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. தமிழ் மக்களின் ஆதரவு சரத் பொன்சேகாவுக்கு கிடைத்துள்ளது.

இந்த நிலையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் பிரிவினை காணப்படுவது வெளியாகியுள்ளது. எனவே தற்போது இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பதன் மூலம் இந்தியாவில் உள்ள அகதிகள் நாடுதிரும்பவும் இலங்கையில் இடம்பெயர்ந்துள்ள அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பவும் வழியேற்படும் என குறிப் பிட்டுள்ள அவர் இலங்கையில் யுத்தம் காரணமாக சுமார் 1000 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

## உலக வங்கியினால்

## வலி . மேற்கில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடுகளின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி

(பொன்னலை)

உலக வங்கியின் நிதியுதவியுடன் வலி. மேற்குப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வீடமைப்புப் பணிகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலக வங்கியின் 2008/2009 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகளே பூர்த்தியடையும் நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் வலி. மேற்குப் பிரதேசத்தில் கணிசமான கிராமங்களிலிருந்த குடிசை வீடுகள் அரை நிரந்தர மற்றும் நிரந்தர வீடுகளாக மாறியிருக்கின்றன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6-49)

## மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் விஷமிகள்


(பொன்னாலை)

பொன்னாலை மற்றும் மூளாய் பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் செல்லும் விஷமிகள் சிலர் அங்கிருப்போரை ஏமாற்றிப் பணம் மற்றும் பொருட்களைப் பறித்துச் செல்லும் புதிய நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பட்டப்பகல் வேளைகளில் வீடுகளுக்குச் செல்லும் விஷமிகள் வீட்டிலுள்ளோரிடம் உங்கள் உறவினர்கள் தான் சொல்லிவிட்டது பணம் வாங்கி வரட்டாம் அல்லது பொருள் வாங்கி வரட்டாம் என்று அவர்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஏமாற்றி பணம் மற்றும் பொருட்களைப் பறித்துச் செல்வோர் மீது சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர். (6-49)

# சிறந்த பண்பு அன்பே



இந்த உலகமே அன்பினால் இயக்கப்படுகின்றது. ஆம் அவனியை தன் அன்பால் இயக்குகின்றவன் ஆண்டவன். இது எல்லா மதங்களின் நம்பிக்கையாக இருக்கின்றது. அது போல மானிட வாழ்வை இயக்குவதும் அன்பே.

எதையும் விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் தூய அன்பை, தாயன்பை என்ன விலை கொடுத்தாலும் வாங்க முடியாது. எதையும் அடைத்து வைத்துவிட முடியும். காற்றையும் நீரையுமே அடைத்து வைக்கின்றோம். ஆனால் அன்பை எதைக்கொண்டும் அடைத்து வைக்க முடியாது. காரணம் அன்பு எப்போதும் தன்னை வெளிப்படுத் திக் கொண்டே இருக்கும். இந்த அன்பைப்பற்றித்தான் இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் (13ஆம் அதிகாரம்) கூறுகிறார்.

இந்த அன்பு இரண்டு வகைப்படும்.

1.இறையன்பு 2 .பிறர் அன்பு

**இறையன்பு**

இறையன்பு ஈடு இணையில்லாதது. இதையே கடவுள் நம் மீது கொண்ட அன்பினால் தன் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்று யோவான் கூறுகிறார்.

**பிறரன்பு**


இது தன்னைப் போல பிறரையும் அன்பு செய்யும், ஏற்றுக்கொள்ளும். ஒரு மண்டேலா தன் இன மக்களை அன்பு செய்தார். ஒரு அம்பேத்கர் வாழ்வில் மனிதத்தைக் தொலைத்த, மனித முகவரியை இழந்த, ஒடுக்கப்பட்டோரை அன்பு செய்தார். உன்னைப் போல் உன் அயலாரையும் அன்பு செய் என்பது இரண்டாம் கட்டளை. உன் அயலான் என்றால் நண்பன் மட்டுமல்ல, எதிரியையும் அன்பு செய். நீ

## பரமபிதா காட்டிய பாதை

காணிக்கைச் செலுத்த வரும் போது உன் மீது மனத்தாங்கல் உள்ளோரிடம் சமாதானம் செய்துவிட்டு பின் வந்து உன் காணிக்கையைச் செலுத்து (மத் 5:23 -24) உனக்கு அன்பு செய்பவர்களுக்கே அன்பு செய்தால் அதனால் என்ன பயன்? (மத் 5: 46) உன் பகைவரையும் அன்பு செய் மத் 5:43)

என் உடமையெல்லாம் வாரிவழங்கினாலும் என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும் என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை. (1 கொரி 13:3) என்னும் பவுலடியாரின் கூற்று முற்றிலும் உண்மை.

ஜோன் ஷரபேர்ட்




# வீழ்ச்சிப் பாதையில் பாகிஸ்தான் கிரிக்கெட்

உலகின் முன்னணி கிரிக்கெட் அணிகளுக்குள் பாகிஸ்தானும் ஒன்று. ஆனால் இந்த அணி, வீழ்ச்சிப்பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இதற்கு பாகிஸ்தானில் நடக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் தான் முக்கிய காரணம்.

கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கச் சென்ற இலங்கை அணி வீரர்கள் லாகூரில் பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளாயினர். அதற்குப்பின் ஆரம்பமானது பாகிஸ்தான் கிரிக்கெட்டின் வீழ்ச்சி. பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க எந்த ஒரு சர்வதேச அணியும் முன்வரவில்லை. இதனால் தங்கள் நாட்டில் நடத்த வேண்டிய கிரிக்கெட் போட்டிகளை டுபாயில் நடத்தி வருகிறது பாகிஸ்தான்.

இதன்விளைவாக அந்நாட்டு கிரிக்கெட் சபை வறுமையில் வாடி வருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, வரும் 2010 இல் உலகக் கோப்பை நடத்த உள்ள நாடுகளின் பட்டியலிலிருந்து பாகிஸ்தானை, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நீக்கிவிட்டது. இதற்கான இழப்பீட்டத் தொகையை ஐ.சி.சி. வழங்கினாலும் கிரிக்கெட் அரங்கில் பாகிஸ்தானின் பெருமை குலைந்துவிட்டது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஏராளமானோர் பலியாயினர். அதற்குப் பின் இந்தியாவுக்கும்,பாகிஸ்தானுக்கும் சுமுக உறவு இதுவரை ஏற்படவில்லை. இதனால் இருநாட்டு கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான போட்டிகளும் இரத்துச்செய்யப்பட்டுவிட்டன.

தவிர இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில் கூட, பாகிஸ்தான் வீரர்கள் இடம் பெற முடியவில்லை. பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஐ.பி.எல். அணியின் உரிமையாளர்கள், பாகிஸ்தான் வீரர்கள் யாரையும் ஏலத்தில் எடுக்கவில்லை. ஏற்கனவே போதிய வருமானம் இன்றி தவித்து வரும் பாகிஸ்தான் வீரர்களுக்கு, ஐ.பி.எல்.மூலம் வரவிருந்த வருவாயும் தற்போது தடைப்பட்டு விட்டது. இதனால் கடும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர் பாகிஸ்தான் வீரர்கள்.

### ஒற்றுமை இல்லை

பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வரும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வீரர்களின் நலனில் அக்கறை செலுத்தத் தவறி வருகிறது. இதனால் அணியில் அடிக்கடி பிளவு ஏற்பட்டு வருகிறது. யூனிஸ்கான் தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டு வந்த பாகிஸ்தான் அணி, கடந்த ஆண்டு "இருபது 20" உலகக்கோப்பையை தன்வசப்படுத்தியது. அதற்குப் பின் சூதாட்ட புகாரில் சிக்கிய யூனிஸ்கான் அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகினார்.

தற்போது முகமட் யூசுப் அணித்தலைவராக உள்ளார். இவர் பொறுப்பேற்றவுடன் அணியின் செயல்பாடு படு மந்தமாகி விட்டது. அவுஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை மோசமாக இழந்துள்ளது. வீரர்களுக்குள் ஒற்றுமை இல்லை என ஒருவருக்கொருவர் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஒருபுறம் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் , அணித்தலைவரை மாற்றவேண்டும், கிரிக்கெட் சபையை மாற்ற வேண்டும் என குரல் கொடுத்து வருகின்றனர். ஒட்டுமொத்தமாக பாகிஸ்தான் கிரிக்கெட் பாரம்பரிய மிக்க புகழை இழந்து வருகிறது. சரிவிலிருந்து மீளவேண்டுமானால், பாகிஸ்தான் அணி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் வெற்றிகளை குவிக்க வேண்டியது அவசியம்.

# தொடரும் முரட்டு ஆட்டம்

கால்பந்து அரங்கின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ சமீபகாலமாக முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். எதிரணி வீரரின் மூக்குடைத்த இவர் தற்போது இரண்டு போட்டிகளில் பங்கேற்க தடையைச் சந்தித்துள்ளார்.

போர்த்துகல் அணியின் தலைவராக இருக்கிறார் கிறிஸ்டியானோ ரொனால்டோ. கடந்த 2008 இல் சிறந்த கால்பந்து வீரருக்கான பிபா விருது பெற்றார். சமீபத்தில் ரியல் மாட்ரிட் கழக அணி இவரை 6 ஆண்டுகளுக்கு 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்தது. இந்த அணிக்காக இது வரை 12 போட்டிகளில் பங்கேற்று 9 கோல்கள் அடித்துள்ளார்.

ஆனால் இந்த ஹீரோ களத்தில் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதற்காக இரண் டாவது முறையாக சிவப்பு அட்டை பெற்று எல்லோருக்கும் வில்லனாக மாறியிருக்கிறார்.

கடந்த 25 ஆம் திகதி நடந்த மலாகா அணிக்கு எதிரான போட்டியில் ரொனால்டோ தனது ரியல் மாட்ரிட் அணிக்காக இரண்டு கோல் அடித்து வெற்றி பெற உதவினார். போட்டியின் 70 ஆவது நிமிடத்தில் எதிரணி வீரர் மூக்கை தனது கையால் உடைத்தார். இதனால் நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு உடனடியாக களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். கடந்த 2009 டிசம்பரில் அல்மெரியா அணி வீரர் மூக்கை உடைத்து சிவப்பு அட்டை பெற்ற இவர் இரண்டாவது முறையாக இப்பிரச்சினையில் சிக்கினார்.

இதுகுறித்து ரொனால்டோ கூறுகையில்,

எதிரணியினரை காயப்படுத்தும் நோக்கத்துடன் விளையாடுபவன் நான் அல்ல. பாட்ரிக் மிட்லிகாவின் மூக்கு உடைந்து இரத்தம் வந்ததை டி.வி. யில் பார்த்து தெரிந்து கொண்டேன். மலாகா அணியினரின் டிரசிங் ரூமிற்கு சென்று அவரிடம் மன்னிப்பும் கேட்டேன். ஆனால் எனக்கு சிவப்பு அட்டை தரப்பட்டதை மிகவும் அவமானமாக உணர்கிறேன் என்றார்.

### மிருகத்தனமான செயல்

சம்பவம் குறித்து மலாகா அணியின் பயிற்சியாளர் ஜுவான் ரமோன் கூறுகையில், இந்த விடயத்தில் ரொனால்டோ சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் பாட்ரிக்கின் முகத்தை நோக்கி, முதலில் ஒருமுறை கையை வீசினார். அப்போது தப்பித்த பாட்ரிக், இரண்டாவது முறை காயமடைந்தார். இது மிருகத்தனமான செயல் என்றார்.

### நிர்வாகி ஆதரவு

ரியல் மாட்ரிட் அணியின் நிர்வாகி ஜோர்ஜ் கூறுகையில், எந்த வீரர் தவறு செய்கிறார். யார் முரட்டுத்தனமாக விளையாடுகிறார்கள்



என நடுவருக்கு தெரியும். ரொனால்டோ யதார்த்தமாக நடந்துகொண்டார். இதற்காக நடுவரின் முடிவை நான் குறை சொல்லவில்லை. ரொனால்டோ எப்போதும் உயர்ந்த நோக்கத்துடன் விளையாடுவார் என்றார்.

இதுவரை இரண்டு வீரர்களின் மூக்கை உடைத்து சர்ச்சையில் சிக்கியுள்ள இவர் இனிமேலாவது ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

# ஓய்வே நிம்மதி -சைமண்ட்ஸ்

அவுஸ்திரேலியாவின் அதிரடி சகலதுறை வீரர் அண்ட்ரூ சைமண்ட்ஸை ரசிகர்களும், அணி நிர்வாகமும் மறந்து விட்டது போலத் தோன்றுகின்றது. ஆனால் கிரிக்கெட் விளையாடாததால் தனக்கு வருத்தம் ஏதும் இல்லை. தற்போது கிடைத்திருக்கும் ஓய்வே நிம்மதியளிக்கிறது என்று அவர் கூறுகிறார்.

மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டுக்குத் திரும்ப தனக்குப் பெரிதாக ஆர்வமில்லை. விதிகள், கட்டுப்பாடுகள் என்ற பெயரில் தான் கட்டுப்போட்டப்படுவதை விரும்பவில்லை என்கிறார் சைமண்டஸ்.

தேசிய அணிக்குத் திரும்ப மீண்டும் முயற்சி செய்கிறீர்கள் என்றால் இல்லை... இல்லவே இல்லை என்கிறார் அழுத்தமாக.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நான் மிகவும் நிம்மதியாக இருக்கிறேன். கடந்த இரண்டாண்டுகளில் எனக்குச் சில சிக்கலான தருணங்கள் ஏற்பட்டன. ஆனால் நான் தற்போது நேரடியாக யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. விதிகள், கட்டுப்பாடுகள் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை என்கிறார் அமைதியாக.

நான் தற்போது உண்மையிலேயே மிகவும் சுதந்திரமாக உணர்கிறேன். வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கிறேன். நான் விரும்பும் ஆட்களுடன் இருக்கி றேன், விரும்பிய விடயங்களைச் செய்கி றேன், இவையெல்லாம் நீண்டகாலமாக எனக்கு இயலாதவையாக இருந்தவை என்று விளக்கமாகத் தெரிவிக்கிறார்.

நான் தற்போது வீட்டிலேயே இருக்கிறேன், வீட்டில் இருப்பதை அனுபவிக்கிறேன். மேலும் மீன் பிடிப்பது, நண்டு பிடிப்பது, நண்பர்களைச் சந்திப்பது, எனது படுக்கை அறையிலேயே படுப்பது எல்லாம் சந்தோஷமாக இருக்கின்றன. இவையெல்லாம் சில ஆண்டுகளாகச் எனக்குச் சாத்தியமில்லாத விடயங்கள் என்கிறார் புன்னகையோடு.

இந்த ஆஜானுபாகுவான வீரரின் கிரிக்கெட் வாழ்வு முழுவதும் மதுபோதை தொடர்பான பிரச்சினைகளால் சிக்கல்கள் ஏற்பட்டன. டெஸ்ட் போட்டிகளை விட இருபது-20 போட்டிகளில் தனக்கு ஆர்வம் அதிகம் என்கிறார் சைமண்ட்ஸ்.

நான் இனியும் டெஸ்ட்போட்டிகளில் விளையாடுவதில் அர்த்தமேயில்லை. உள்ளூர் போட்டிகளில் விளையாடுவதிலும் எனக்கு விருப்பமில்லை. சர்வதேச போட்டிகளையே விரும்புகிறேன். இருபது-20 போட்டிகளில் ஆடுவதே பிடிக்கிறது. அதில்தான் ஆட்டத்தை ரசித்து விளையாட முடியும் என மனந்திறந்து சொல்கிறார்.

எனக்குப் போதுமென்று தோன்றுகிற போது கிரிக்கெட்டிலிருந்து முழுமையாக விடைபெறுவேன். அது இந்த ஐ.பி.எல். போட்டியுடனும் இருக்கலாம் அல்லது இன்னும் இரண்டொரு வருடங்களும் கடக்கலாம் என்று பூடகமாக முடிக்கிறார்.

### சைமண்ட்ஸும் சர்ச்சைகளும்

2008இல் சர்வதேச கிரிக்கெட் சபையின் முறையீட்டு ஆணையர் ஜோன் ஹான்சன், சைமண்ட்ஸை விமர்சித்தார். பிரெட் லீயுடன் நட்பாகச் சைகை செய்த இந்தியவீரர் ஹர்பஜன் சிங்குடன் பிரச்சினை செய்ததாக சைமண்ட்சை ஹான்சன் குற்றஞ்சாட்டினார்.

2008ஆம் ஆண்டிலேயே பங்களாதேஷிற்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரின் போது டார்வினில் அணி கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டு மீன்பிடிக்கச் சென்று விட்டார் சைமண்ட்ஸ். அதன் விளைவாக வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.


அதே ஆண்டு நவம்பரில் பிரிஸ்பேனில் உள்ள ஒருகிளப்பில் சண்டையிட்டதாக சைமண்ட்சின் பெயர் பரபரப்பாக செய்திகளில் அடிபட்டது.



2009 ஜனவரியில் ஒரு வானொலி



நிகழ்ச்சியில் பிரண்டன் மக்கல்லத்தை மாட்டுச்சாணக் குவியல் என்று விமர்சித்து மறுபடி யும் சர்ச்சையைக் கிளப்பினார்.

2009 ஜுனில் இருபது-20 உலகக் கோப்பை போட்டியின் போது, நள்ளிரவில் மதுபானம் அருந்திவிட்டு ஆர்ப்பாட்டம் செய் ததாக வீட்டுக்கு அனுப்பப்பட்டார் அண்ட்ரூ சைமண்ட்ஸ்.


யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபடுவதையும் மேலுள்ள படங்களிலும், யாழ். நூலகத்துக்குச்சென்ற அமைச்சரை யாழ். அரச அதிபர் க.கணேஷ் வரவேற்பதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்துப் பேசுவதையும், யாழ். நூலகப் பகுதியை அமைச்சர் ரோகித போகொல்லாகம பார்வையிடுவதையும் படங்களில்காணலாம்.

படங்கள்:-றம்சன்

# 19வயதுக்குட்டோர் உலகக்கிண்ணம்; அவுஸ்திரேலிய அணி சம்பியனானது



(லிங்கோல்ன்)

ஹசில்வூட்டின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் 19 வயதுக்குட்பட்டோர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியது.

ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்டோர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வந்தது.

இதில் நேற்று லின்கோலினில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டிச்சட்சன் 44 ஓட்டங்களையும் ஆம்ஸ்ரோங் 37, புலோரஸ் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சார்மட்பாற்ரி 3 விக்கெட்டுக்களையும் பையாஸ்பட் 2 விக்கெட்டுக்களையும் ராஸா ஹசன், பாபர் அஸாம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 46.4 ஓவர்களில் 182 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அஸீம் கும்மான் 41 ஓட்டங்களையும் அகமெட் ஸீகட் 36, பாபர் அஸாம் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹாஸில்வூட் 4 விக்கெட்டுக்களையும் டோரன் 3 விக்கெட்டுக்களையும் மைக்டெர்மோட், புலோரஸ் மற்றும் ஹீத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்டோர் உலகக் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றிக்கு வழியமைத்த ஹாசில் வூட் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (5)

# வலைப்பந்தாட்ட போட்டியில் முருகன் வி.க. சாம்பியன்

(உடுவில்)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம் பெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதி ஆட்டத்தில் உடுவில் மத்திய விளையாட்டுக்கழகமும் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டதில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் 17க்கு 15 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் சுற்றில் விளையாட தகுதி பெற்றுள்ளது. (ச-5)

# தற்காலிக...

ஆசிரியர்களின் தற்காலிக நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ் அறிவித்தல் உடனடியாக அமுலுக்கு வருகின்றது. அவ் ஆசிரியர்கள் தங்கள் வல யத்தில் கடமைக்கு சமுகமளித்து தாம் கடமையாற்ற வேண்டிய பாடசாலை தொடர்பான அறிவித்தலை தத்தமது வலயக் கல்விப் பணிப் பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள பாடசாலை ஆசிரியர்கள் அதே பாடசாலையில் நாளைமுதல்கடமைக்குச்சமுகமளிக்கவேண்டும்.

தவறும் பட்சத்தில் அவ் ஆசிரியர்கள் தமது பதவியை இழந்தவர்களாகக் கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இராணுவத்தின்...

புனரமைப்புப் பிரிவில் ஆணையாளராகக் கடமையாற்றியிருந்தார்.

மேஜர் ஜெனரல் சமரசிங்கா, சரத் பொன்சேகாவின் தீவிர ஆதரவாளர். அவர் முன்னர் யாழ்.குடாநாட்டில் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றியிருந்தார்.

அதன் பின்னர் கடந்த ஜூலை மாதம் இராணுவத்தின் தலைமை அதிகாரியாக அவரைப் பொன்சேகா நியமித்திருந்தார். மேலும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இராணுவத்தின் கள நிலைப் பொறியியற் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் இடத்திற்கு பிரிகேடியர் பிரசாத் சமசிங்கா நியமிக்கப்பட்டுள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

# கணனி ஊடாக தேர்தல் முறைகேடா? பொய் என்கிறது தேர்தல் செயலகம்

(கொழும்பு)

கணனி ஊடாக தேர்தல் முறைகேடுகள் இடம் பெற்றதாக சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

வாக்கு எண்ணும் பணிகள் மனித வலுவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதாகவும் கணனிகள் உபயோகிக்கப்படவில்லை எனவும் தேர்தல் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்துள்ளார்.

கைகளின் மூலமே வாக்குகள் எண்ணப்பட்டன. இதற்கு மேலதிகமாகவே கணனிகள் பயன்படுத்தப்பட்டது.

வாக்கு எண்ணும்நடவடிக்கைகளில்மோசடி இடம் பெற்றுள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மை இல்லை. வாக்குகளை மீள எண்ணுவதற்கு தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம் முறை ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிபுகளை மகிந்த ராஜபக்ஷவுக்கு சாதகமான வகையில் திருத்தும் சூழ்ச்சியில் இந்தியாவின் தொழில்நுட்ப நிபுணர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இதற்கான ஆதார பூர்வமான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. (ச-5)

# மக்களின் இயல்பு வாழ்க்கை...

நலத்துறை அமைச்சரு மான டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரின் ஊடக செய லாளர் தெரிவித்துள்ள செய்திக் குறிப்பு வரு மாறு,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக எழுந்துள்ள ஒரு தகவலை அடிப்படையாகக் கொண்டு அவர் அப்பதவியை இராஜினாமாச் செய்யக் கூடாது எனக் கோரி நேற்று பொது அமைப்புகளினால் யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பொது ஹர்த்தால் நடவடிக்கையையடுத்தே அமைச்சர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் இவ்வாறான ஹர்த்தால்கள், கடையடைப்புக்கள் போன்ற பல்வேறு இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தபோதெல்லாம் தான் அதற்குத் தொடர்ந்தும் எதிராகவே கருத்துக் கூறி வந்துள்ளதை உணர்த்தியதுடன்,

பொதுமக்களின் உணர்வுகளையும் கருத்துக் கூறும் சுதந்திரத்தையும் தான் பெரிதும் மதித்து வருவதாகவும் அதற்காகப் பொது மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கைக்குத் தடையான வகையில் செயற்பாடுகளை மேற் கொள்வது தனக்கு மிகுந்த வேதனையைத் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

தனது இராஜினாமா தொடர்பில் தான் பரிசீலனை செய்து வருவதாகவும் இவ் விடயம் தொடர்பில் தான் பகிரங்கமாக அறிவிப்பதாகவும் எனவே இவ்வாறான ஹர்த்தால் செயற்பாடுகளை இப்போதும் சரி எதிர்காலத்திலும் சரி தவிர்த்துக் கொள்வதே எமது மக்களுக்கும் எமது சமுதாயத்திற்கும் நாம் செய்யும் சிறந்த கடமையாகும் என்றும் உணர்த்தியுள்ளார் என்றுள்ளது. (ச)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தனது நீண்ட காலப் பிரச்சினையான நிரந்தர அரசியல் தீர்வு விடயத்திலும் இடம்பெயர்ந்த நிலையில் அல்லல்படும் மக்களின் அவசர,அவசிய ,மனிதாபிமானப் பிரச்சினையிலும் அபிவிருத்திப் பணிகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச வேண்டும் என்ற செய்தியை இத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

**தமிழ்க் கூட்டமைப்பின் பலம்**

எனவே அரசாங்கமும் ஜனாதிபதியும் எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் புறக்கணித்து விட்டு, தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவ் விடயங்களில் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கும். வன்னி மாவட்ட வாக்காளர்கள் இடம் பெயர்ந்த நிலையிலும் நிவாரணக் கிராமங்களிலும் மீளக்குடியேற்றப்பட்ட பிரதேசங்களிலும் வாக்களிப்பதற்கான சீரான வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.

கடந்த ஒரு வருட யுத்த பேரவலத்தின் துயரத்திலிருந்து இன்னமும் அவர்கள் மீளவில்லை. அரசாங்கத்திலும் தேர்தலிலும் நம்பிக்கை வைக்க மறுத்துள்ளனர்.

இதை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்கால நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடியதாக மாற்றம் பெற வேண்டும்.

பல்வேறு சிரமங்களுக்கும் வசதியீனங்களுக்கும் மத்தியில் துணிச்சலுடனும் உணர்வுடனும் வாக்களித்த வன்னி மக்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாக்கு என்ற அரசியல் அசுர பலமே எதிர்காலத்தில் எமது மக்களின் அரசியல் இருப்பையும் உறுதிப்பாட்டையும் தீர்மானிக்கும் சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதைத் தொடர்ந்தும் நாம் நிரூபிப்போம் என்றார்.

இதேவேளை வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் வாக்குகள் குறைந்தமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின். அரசியல் பலமே காரணம் என அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# லங்கா...

இதற்கிடையில் இது தொடர்பான வழக்கு விசாரணைகளின் பொருட்டு எதிர்வரும் புதன்கிழமை கங்கொடவில நீதிமன்றத்திற்கு வருகை தருமாறு தமக்கு இரகசியப் பொலிஸார் பணித்துள்ளதாக அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பிரியந்த லியனகே தெரிவித்துள்ளார். (ச-3,5,9)

# வெளிவிவகார...

க.கணேஷ், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோருடன் கலந்துரையாடினார்.

யாழ்.மாவட்டத்தில் வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தை திறப்பது குறித்து ஆராய்வதே அவரின் யாழ்.விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-7)

# துன்புறுத்தல்கள் தொடருமா...

அவர் மேலும் கூறியதாவது, தம்மைத் துன்புறுத்தும் அரசாங்க அதிகாரிகள் மேற்கொண்ட ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் தம்மிடம் ஆவணங்கள் இருந்ததாகவும் எனவேதான் தாம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்ததாகவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

தம்மைப் பயமுறுத்துவோர் தேர்தலின் போது மேற்கொண்ட முறைகேடுகள் தொடர்பான சாட்சியங்கள் தம்மிடம் உள்ளதாகத் தெரிவித்த அவர்,

தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் அதனை மக்களுக்குத் தெரியப்படுத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார். தமது அலுவலகத்தில் தேடுதல் நிடத்துவது, பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளமை, நெருங்கிய அதிகாரிகள் கைது செய்யப்பட்டமை போன்ற செயல்களில் இறுதியாக தம்மைப் படுகொலை செய்வதற்கே அரசாங்கம் தயாராகி வருவதாக சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனக்குப் பாதுகாப்பளித்த 90 படைவீரர்களுக்குப் பதிலாக தற்போது 4 பொலிஸ்காரர்கள் கைத் துப்பாக்கிகளுடன் மாத்திரம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

படைகளிலிருந்து சட்ட ரீதியாக வெளியேறிய மூன்று ஜெனரல்கள், மூன்று பிரிகேடியர்கள் மற்றும் இரண்டு கேணல்கள் எனக்கு ஆதரவளித்ததாகக் கூறப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**கொலைக் குற்றச்சாட்டு**

இவர்கள் சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. இது பொய்யான தகவலாகும்.

நேற்று முன்தினம் மாத்திரம் தமது அலுவலகத்தில் இருந்த 20 பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 23 கணனிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவை யாவும் நீதிமன்ற ஆணையின்றியே இடம் பெற்றுள்ளதாக சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சட்டம், ஒழுங்கு அனைத்தும் உடைந்து போயுள்ளது. யாரும் பொலிஸுக்கோ நீதிமன்றத்துக்கோ செல்ல முடியாது. எந்த நேரத்திலும் யாரும் கைது செய்யப்படலாம். இந் நிலையில் நாட்டில் அனைவரும் தமது பணிகளை உரிய முறையில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**வெளியேற மாட்டேன்**

நான் ஒருபோதும் நாட்டை விட்டு வெளியேறப் போவதில்லை. எனது உயிரைப் பாதுகாப்பதற்காக மறைந்து வாழ வேண்டியுள்ளது.நானும் எனது குடும்பத்தினரும் (மனைவி, வெளிநாட்டில் படிக்கும் 2 மகள்மார்) நாட்டில் இருந்து வெளியேற முடியாதவாறு விமான நிலையத்தில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளைதான் தனது பாதுகாப்புக்காகவே சினமன் லேக் சைட் ஹோட்டலில் 20 அறைகளை வாடகைக்கு அமர்த்தித் தங்கியிருந்ததாகக் கூறிய அவர், இதன்போது அரசாங்கம் தன்னையோ அல்லது எதிர்க்கட்சித்தலைவரையோ கொலை செய்யத் திட்டமிடுவதாகச் செய்தி தனக்குக் கிடைத்ததாகக் குறிப்பிட்டார்.

எனினும் இதனை மறைப்பதற்காகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கொலை செய்ய தாம் திட்டமிட்டதான செய்தியை அரசாங்கம் பரப்பி விட்டது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ச-5)


அடுத்த பிரிவு ஆரம்பம் 03.02.2010

DIPLOMA IN ENGLISH

SPOKEN ENGLISH (Full/Part time) Duration 2-3 Months

அனுபவமிக்க திறமைவாய்ந்த ஆசிரியர்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க பயிற்சி வழங்கப்படும்

Grammar. Speaking & Pronunciations..Reading. .Listening......Writing... ... Vocabulary.....etc

Free
Audio CD & Handouts

UK VISA
உங்கள் காலடியிலே UK visa வசதிகள் செய்து தரப்படும்.
Call:- 011 459 4 104

தனிப்பட்ட கவனிப்பு, மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி, பாடநெறி முடிவில் ISO-90001-2000 Certified சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவும் தனித்தனி ஆசிரியரால் நடாத்தப்படும். வயதெல்லை இல்லை.

பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள். Tel:-0774032051

INTERNATIONAL CITY COLLEGE PVT LTD

NO 21, Stanly Road (People bank Lane), JaffnaTel: 0214 901 464
Email: www.icclanka@gmail.com Web: www.icclanka.com. (C-4864)

Impossible is nothing Experience the different





ICT-COURSES

தொழிற் பயிற்சிகள், அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச கற்கைகள் என்பவற்றினை வழங்கிவருகின்ற நாம் பின்வரும் ICT கற்கைகள், சேவைகளினை புதிய கல்வியாண்டில் வழங்கவுள்ளோம்.

- School Based ICT
- Certificate/ Diploma/ Higher Studies
- Training Centre

➢ **ICT-School Based:**

| FUTURE KIDS Programme | SCHOOL TOOLS Programme | G.C.E.(O/L), G.C.E.(A/L) Programme |
|---|---|---|
| Grades 1 - 3 | Grades 4 - 9 | Grades 10 - 13 |
| Age group 6 to 9 years | Age group 10 to 14 years | G.C.E.(O/L)- ICT<br>G.C.E.(A/L)- ICT<br>G.C.E.(A/L)- GIT |

➢ **Certificate/ Diploma/ Higher Studies:**

*Diploma in Ms Office*
*Diploma in DTP*
*Diploma in Data Base Management*
*Diploma in Internet & email*
*Diploma in Computerized Accounting*
*BCS - British Computer Society*



➢ **ICT - Training Centre**

JTI கணினிப் பயிற்சி மையமாக விளங்குகின்றது. தனிப்பட்ட அல்லது குழுவிற்கு எமது விசேட நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்களினால் கையேடுகள், பயிற்சிகள், கருத்தரங்குகள் ஒழுங்குசெய்யப்படுகின்றன. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

புதிய பிரிவிற்குரிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. மேலதிக விபரங்களினை நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவும்.

Dept.of Computer Science
Jaffna Technical Institute (JTI)
இல.46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0215670345
e-mail: jtiedu@gmail.com (C-4353)



Computer Engineer -USA

அரசு(ICTA)வழங்கும் Scholarship

①System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
①வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
①USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
*Carrier Guidance, Student Visa, Work Permit
①செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்

Per Module - ~~15000/=~~ 3800/=

Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்

Free Diploma in Hardware Technology-DHT,
INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL

இச்சலுகை 05.02.2010 வரை மட்டுமே.

MCS
Supported By UNDP/JRRP
T.P-772395895

324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764 (C-4366)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.